உதயன்

விலை ரூபா 7.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 23 செவ்வாய்க்கிழமை (06-05-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:161

# பாலா கிளிநொச்சி சென்றதும் அவசரமாகப் பிரபாவுடன் பேச்சு

## ஜப்பான் தூதருடன் நாளை சந்திப்பு

கொழும்பு,மே6

**விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தனது பாரியார் அடேல் சகிதம் நேற்றுக் காலை கிளிநொச்சி சென்றடைந்ததும் அவசர அவசரமாகத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்துப் பேசினார். இருவரும் தனியாக நெடுநேரம் பேசினார்கள்.**

அன்ரன் பாலசிங்கம் லண்டனிலிருந்து நேற்றுக்காலை கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கினார். அங்கிருந்து இலங்கை விமானப் படை ஹெலி மூலம் கிளிநொச்சி சென்றார். நேற்றுக்காலை 10.25 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்

(14ஆம் பக்கம் பார்க்க)

நேற்று கிளிநொச்சியில் வந்திறங்கிய பாலசிங்கம் தம்பதியர் அழைத்துவரப்படுகின்றனர்.



## புலிகளின் கடல்பயணப் பிரச்சினை குறித்து ஹெல்கிஸன் - கண்காணிப்புக்குழு பேச்சு

கொழும்பு,மே6

நோர்வே வெளிவிவகார பிரதி அமைச்சர் விடர் ஹெல்கிஸனை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் சந்தித்துப் பேச்சு நடத்தியிருக்கின்றனர். வடக்கு - கிழக்கு கடற் பிரதேசத்தைப் புலிகள் பயன்படுத்துவது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினை குறித்து அவர்கள் ஆராய்ந்திருக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது. நோர்வேத் தூதுவர் ஹன்ஸ் பிரட்ஸ்கர், கண் காணிப்புக் குழுத் தலைவர் டெலிவ்சன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

புலிகளின் கடற் போக்குவரத்துக்கள் குறித்து கண்காணிப்புக் குழுவினர் அரசுடனும் புலிகளுடனும் நடத்திய பேச்சுக்கள் குறித்து கண்காணிப்புக்குழுத் தலைவர் டெலிவ்சன் நோர்வே பிரதியமைச்சரிடம் விளக்கிக் கூறியிருக்கிறார்.

கடலில் மோதல்களைத் தவிர்ப்பதற்காக கண்காணிப்புக்குழுவினர் தெரிவித்த யோசனைகள் குறித்தும் நோர்வே பிரதியமைச்சரிடம் எடுத்துக் கூறப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

### இவ்வாரம் இலங்கைக்கு வருகிறார் நம்பியார்

கொழும்பு,மே6

அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை தொடர்பாக அரசு, புலிகள் தரப்பினருடன் பேச்சு நடத்துவதற்கு இந்தியப் பிரதிநிதி ஜெனரல் சதீஸ் நம்பியார் இந்த வாரம் இலங்கை வரவுள்ளார்.

பிரதமருக்கு விடுதலைப் புலிகள் அனுப்பியுள்ள கடிதத்தின் அடிப்படை விஷயமாக அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினையே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதேநேரம் சமாதானப் பேச்சுக்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள பிரதான எதிர்க்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி. ஆகியவையும் சமாதானப் பேச்சுக்களில் இந்தியத் தலையீடு தேவை என்று வலியுறுத்தியுள்ளன. அரசிடமும் கோரிக்கையும் விடுத்திருந்தன.

(14ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானம் பேச்சு மேசையில் அல்ல; அது களத்தில் காணப்பட வேண்டும்!

### பிரதமரைச் சந்தித்தபின் ஹெல்கிஸன் வலியுறுத்து

இலங்கை மக்களுக்கு சமாதானத்தைப் பெற்றுக்கொடுக்கவேண்டும் என்பதே எமது பிரதான நோக்கம். சமாதானம் என்பது பேச்சு மேசையில் இடம்பெறுவதில்லை. அது களத்தில் காணப்படவேண்டும்.

- இவ்வாறு நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் தெரிவித்தார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுமுன்தினம் சந்தித்தபின் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பியினருக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு,மே6

ஈபிடிபி. உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முப்படைத் தளபதிகளுக்கும் பொலீஸ்மா அதிபருக்கும் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் புலிகளால் தொடர்ந்தும் கொலைசெய்யப்பட்டு வருகின்றனர். கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் கரவெட்டி பிரதேச சபையின் முன்னாள் தலைவர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பான் உதவுநர் மாநாடு அனுசரணையாளர் கருத்து

கொழும்பு,மே6

பிரச்சினைகளை இனங்காண்பதில் ஈடுபட்டு வருகிறோம். அதில் முன்னேற்றம் கண்டுள்ளோம். ஆனால், ஜப்பானில் உதவுநர் மாநாடு நடப்பதைக் காணக்கூடிய அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளோமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

- இவ்வாறு நோர்வேயின் பிரதி வெளிநாட்டு அமைச்சர் விடர் ஹெல்கிஸன் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்திருக்கிறார்.

ஹெல்கிஸன் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் நேற்று திங்கட்கிழமை விடு

(14ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டையில் முகாம் அமைப்பதை எதிர்த்து நேற்று அங்கு போராட்டம்

யாழ்ப்பாணம்,மே6

யாழ்.கோட்டைப் பகுதியில் புதிதாக படைமுகாம் நிறுவுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதியில் நேற்றுக்காலை பெரும் எதிர்ப்புப் போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்றுக்காலை 8 மணிமுதல் முற்பகல் 11மணிவரை இடம்பெற்ற இந்த அடையாள எதிர்ப்புப் போராட்டத்தில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

யாழ்.கோட்டைக்கு மேற்குப் புறமாக - மீனாட்சிபுரம் குடியிருப்புக்கு அருகல் - ஒன்றுதிரண்ட பொது மக்கள், அங்கு கூடிநின்று தமது அடையாள எதிர்ப்பை வெளிக்காட்டும் ஒன்றுகூடல் ஒன்றை நடத்தினர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ்.

(14ஆம் பக்கம் பார்க்க)



நேற்று கோட்டைப் பகுதியில் நடந்த எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினர்.

## சமாதானப் பேச்சுக்களில் புலிகள் மீண்டும் பங்குபெறுவது நிச்சயம்

### பிரதமரைச் சந்தித்த பின் அகாஷி நம்பிக்கை

சமாதானப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் மீண்டும் கலந்துகொள்வார்கள் என்பது நிச்சயமானதாகும் என்று ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இரவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலரிமாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் பத்திரிகையாளர்களைச் சந்தித்த பொழுதே அகாஷி இவ்வாறு தெரிவித்தார்.

டோக்கியோவில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஒன்றுபோல முக்கியத்துவம் வாய்ந்ததாகும் எனவும் அதனால் கைநழுவவிட எந்த ஒருதரப்பும் இடமளிக்காது என தான் நம்புவதாகவும் யசூசி அகாஷி கூறினார்.

நோர்வே வெளிவிவகார பிரதியமைச்சர் விடர் ஹெல்கிஸனும் நேற்றுமுன்தினமிரவு பிரதமர் ரணிலைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## போராட்டம் முடிந்த கையோடு படையினர் துப்புரவுப் பணியில்

அரியாலை,மே.6

கோட்டைப் பகுதியில் இராணுவ முகாம் அமைப்பதற்கு எதிராக நேற்றுக் காலை நடத்தப்பட்ட எதிர்ப்புப் போராட்டம் முடிவடைந்த கையோடு தமது துப்புரவுப் பணிகளைப் படையினர் ஆரம்பித்தனர்.

போராட்டம் நடந்த சமயம் தமது முகாம் அமைப்பதற்கான துப்புரவுப் பணியைப் படையினர் இடைநிறுத்தியிருந்தனர்.

போராட்டம் முடிவடைந்த பின்னர் தமது துப்புரவுப் பணிகளை முழு வீச்சில் படையினர் மேற்கொண்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

புல்டோசர்கள் மூலம் அந்தப் பகுதியில் உள்ள சிறுமரங்கள், பற்றைகளை அகற்றும் பணியில் படையினர் ஈடுபட்டனர். (ம-3-17)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கோட்டையில் முகாம் அமைப்பதை பிரதமர் தடுத்து நிறுத்தவேண்டும்

## மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் மகஜர்

யாழ்ப்பாணம்,மே6

யாழ்.கோட்டையையும் அதன் மேற்குப் பகுதிகளையும் உள்ளடக்கி புதிய படைமுகாம் ஒன்றை அமைப்பதற்கு இராணுவம் மேற்கொண்டுவரும் முயற்சிகளை உடனடியாகத் தடுத்து நிறுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத்தினால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜரில் இவ்வாறு கோரப்பட்டுள்ளது. பிரதமரிடம் கையளிப்பதற்காக இந்த மகஜர் நேற்று முற்பகல் 11 மணியளவில் ஒன்றியப் பிரதிநிதிகளால் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இந்த நேரத்தில் இயல்புநிலை தோற்றுவிக்கப்படவேண்டும். இதற்கான சந்தர்ப்பம் இருக்கும்போது புதிய முகாம் அமைக்கும் பாதுகாப்பு அமைச்சின் இந்த நடவடிக்கை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல கடந்த மார்ச் மாதம் 27ஆம் திகதி தங்களுக்கு அனுப்பிய கடிதத்திலும் முகாம் அமைப்பதற்கான எமது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தோம். அதற்கு செவிசாய்த்து மாநகர சபை வளாகத்தில் படை முகாம் அமைப்பதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தீர்கள்.

ஆனால், மீளவும் கோட்டைப் பகுதியில் படைமுகாம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதையிட்டு பொதுமக்கள் பெரிதும் கவலையடைந்துள்ளனர். இப்பகுதியில் முன்னர் அமைந்திருந்த மார்புநோய் வைத்தியசாலை, சிறுவர் வைத்தியசாலை ஆகியவற்றை மீளவும் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இச்சுற்றாடலில் மீனாட்சி அம்மன் கோயில், வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகள், தபாலகக் கட்டடத் தொகுதி, ரெலிக்கொம், வீரசிங்கம் மண்டபம் மற்றும் கிறிஸ்தவ சேமக்காலை, மீன் சந்தை ஆகியனவும் அமைந்துள்ளன. இப்பகுதியில் படைமுகாம் அமைப்பது இவற்றுக்கும் பெரும் இடைஞ்சலாக இருக்கும்.

யாழ்.நகரைப் பொறுத்தவரையில மிக அதிக அளவிலான சனக்கூட்டம் திரளக்கூடிய இடமாக இது இருக்கிறது. அதாவது, காலிமுகத்திடல் போன்று சனக்கூட்டம் திரளக்கூடியதும் நிகழ்வுகளை நடத்தக்கூடியதுமான இடமும் இதுவேயாகும். இந்த இடத்தில் நிகழ்ந்த கடந்தகாலச் சம்பவங்கள் சில இன்றும் நெஞ்சை நெருடுகின்றன.

1974ஆம் ஆண்டு தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றபோது ஏற்பட்ட அசம்பாவிதத்தில் 11பேர் கொல்லப்பட்டமை, 1981ஆம் ஆண்டு யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டமை போன்ற நிகழ்வுகளை தமிழ் மக்கள் என்றுமே மறக்கமுடியாது. சரித்திரத்தை எம்மால் மாற்றமுடியாது.

சரித்திர சம்பவங்களில் இருந்து தவறுகளை உணர்ந்துகொள்ளலாம்.

எனவே, இது விடயத்தில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு படைமுகாம் அமைப்பதை நிறுத்தவேண்டும் என்றுள்ளது.

இதன் பிரதிகள் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இலங்கைக்கான நோர்வேத் தூதர், விடுதலைப் புலிகளின் தலைவர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ம-10)

# கோட்டையில் முகாம் அமைப்பது குறித்து மீளப் பரிசீலிக்கப்படும்

## மாவை எம்.பியிடம் பிரதமர் தெரிவிப்பு

யாழ்.கோட்டைப் பகுதியில் புதிதாக படைமுகாம் நிறுவுவது தொடர்பாக தாம் மீள்பரிசீலனை செய்வதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராஜா இத்தகவலை 'உதயனுக்கு'த் தெரிவித்தார்.

பிரதமருடன் தான் நேற்றுக்காலை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியபோதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கியதாக மாவை எம்.பி. தெரிவித்தார்.

இதுகுறித்து மாவைஎம்பி மேலும் கூறியதாவது:-

நேற்றுக் காலை கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தில் பங்குபற்றிய பின்னர், அதுபற்றி பிரதமருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினேன்.

யாழ்.கோட்டைப் பகுதியில் படைமுகாம் . அமைக்கும் நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்பதையும் இல்லையெனில் மக்கள் எதிர்ப்புப் போராட்டங்கள் தொடரும் என்றும் பிரதமரிடம் நான் வலியுறுத்தினேன்.

இது தொடர்பாகப் பதிலளித்த பிரதமர் கோட்டையில் முகாம் அமைப்பது பற்றி தாம் மீள்பரிசீலனை செய்வதாகத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தை இன்று (5ஆம் திகதி திங்கட்கிழமை) நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸனும் சமாதானக் குழு உறுப்பினர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் கொழும்பில் சந்தித்துப் பேசவிருக்கின்றனர். அப்போது கோட்டையில் முகாம் அமைப்பது குறித்து ஆராயப்படும். அதன் பின்னரே இந்த விடயத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் - என்று பிரதமர் தெரிவித்தார் என மாவை எம்.பி. மேலும் சொன்னார். (ம-9)



கோட்டைப் பகுதியில் முகாம் அமைக்கவேண்டாம் என்று கோரி நேற்று நடத்தப்பட்ட எதிர்ப்புப் போராட்டத்தில் பங்குபற்றியவர்களை முதலிரு படங்களிலும், தயார் நிலையில் உள்ள கலகத் தடுப்புப் பொலிஸாரை மற்றைய படத்திலும் காணலாம்.

*(படங்கள் : ரமா, வசந்தன்)*

# தலதா மாளிகை தாக்குதல் வழக்கில் குற்றப் பத்திரங்கள் கையளிப்பு

## முதல்கட்டத்தில் 22 சாட்சிகள் விசாரணைக்கு அழைக்கப்படுவர்

கண்டி,மே6

கண்டி தலதா மாளிகை மீதான குண்டுத் தாக்குதல் வழக்கில் நாம் குற்றவாளிகள் அல்லர் என மூன்று எதிரிகளும் கண்டி மேல் நீதிமன்ற நீதிபதியிடம் தெரிவித்தனர். அவர்களுக்கு எதிரான குற்றப்பத்திரங்கள் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

இந்த வழக்கு கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி டி.எல்.ப்ளெக்கம்வசம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தலைமறைவாகி இருக்கும் முதலாம் எதிரியான சுப்பிரமணியம் இரவீந்திரன் (திருகோணமலை) என்பவரைத் தவிர 2ஆம் எதிரியான முத்துலிங்கம் சிவராஜா அல்லது மாஸ்ரர் (கரடியனாறு), மூன்றாம் எதிரியான முத்துசுவாமிப் பிள்ளை தர்மலிங்கம் (திருகோணமலை), 4ஆம் எதிரியான கிருஷ்ணசுவாமி இராமச்சந்திரன் (உடபோராதனை) ஆகிய மூவரும் விளக்கமறியலிருந்து நீதிமன்றத்துக் கொண்டுவரப்பட்டிருந்தனர்.

149 குற்றச்சாட்டுக்களின் பேரில் இவர்கள் நால்வர் மீதும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தமிழில் வாசிக்கப்பட்டு நேற்றுக் கையளிக்கப்பட்டன.

இவ்வழக்குத் தொடர்பாக 149 சாட்சியங்கள் அழைக்கப்படவுள்ளனா. இவர்களின் 22 சாட்சிகளை முதலாவது கட்டத்தில் சாட்சியமளிக்க அழைப்பதென நீதிபதி அறிவித்தார். இம்மாதம் 12ஆம், 13ஆம் திகதிகளிலும் 26,27,28ஆம் திகதிகளிலும் விசாரணைகள் நடைபெறுமென அரசதரப்புச் சட்டத்தரணி புவனேக அலுவிகார, எதிரி தரப்பு சட்டத்தரணி அப்பாப்பிள்ளை விநாயகமூர்த்தி ஆகியோரின் இணக்கத்துடன் நீதிபதி அறிவித்தார்.-

### ஆங்கில மூல இலவச பாடப் புத்தகங்கள்

யாழ்ப்பாணம்,மே6

தரம் 6,7 இல் ஆங்கில மொழி மூலம் கற்கும் மாணவர்களுக்கான கணிதம், சுகாதாரம், உடற்கல்வி, சுற்றாடற்கல்வி ஆகியவற்றின் ஆங்கில மொழிமூல இலவசப் பாடப்புத்தகங்கள் யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டுள்ளன.

ஆங்கில மொழிமூலம் கற்பிக்கும் பாடசாலை அதிபர்கள் நாளை யாழ். கல்வி வலயத்திற்கு வருகைதந்து களஞ்சியப் பொறுப்பாளரிடமிருந்து பாடநூல்களைப் பெற்றுககொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார். (ம-8)

# நாளைக்குள் தீர்வு இல்லையேல் அரசாங்க மருத்துவர்கள் வேலை நிறுத்தத்துக்கு தயார்!

கொழும்பு,மே6

அரசாங்க மருத்துவர்கள் வேலை நிறுத்தத்துக்குத் தயாராகிறார்கள். மருத்துவர்களின் சம்பள முரண்பாட்டுப் பிரச்சினைக்கு நாளை 7ஆம் திகதிக்கு முன் தீர்வு கிடைக்காவிடின் 8ஆம் திகதி நண்பகல் முதல் தொடர்ச்சியான வேலைநிறுத்தம் மேற்கொள்வதென அரசாங்க மருத்துவ அதிகாரிகளின் சங்கம் தீர்மானித்திருக்கிறது.

சங்கத்தின் செயற்குழு நேற்றுமுன்தினம் கூடி இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதென சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டாக்டர் திமுத் சில்வா தெரிவித்தார்.

சம்பள முரண்பாடு குறித்து ஆராய நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் உப குழு, முரண்பாடு நீக்கப்பட வேண்டுமெனத் தீர்மானித்தது. அதன்படி, புதிய சம்பளத்திட்டமொன்றை வகுக்குமாறு சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டது. சுகாதார அமைச்சும் கடந்த ஏப்ரல் 8ஆம் திகதி புதிய சம்பளத் திட்டத்தைக் கையளித்தது.

ஆயினும் ஒருமாதம் கடந்தும் புதிய சம்பளத் திட்டத்துக்கு அமைச்சரவையின் அனுமதி இன்னமும் கிடைக்கவில்லை எனவும் ஊடகப் பேச்சாளர் தெரிவித்திருக்கிறார்.

# சூரியன்-புதன்-பூமி கோள்கள் நேர்கோட்டில் தோன்றும்!

யாழ்ப்பாணம்,மே6

சூரியன், புதன், பூமி ஆகிய மூன்றும் ஒரே நேர்கோட்டில் தோன்றும் அபூர்வ காட்சி நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

முற்பகல் 11.13 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரையுள்ள நேரத்தில் இந்தக்காட்சியைக் காணமுடியும்.

பலவருடங்களுக்கு ஒரு தடவை நிகழும் 'புதசஞ்சாரணம்' என்னும் இந்த அரிய காட்சியை வெற்றுக் கண்களால் பார்க்கமுடியாது.

நாளைமறுதினம் வியாழக்கிழமை சந்திரனும் வியாழனும் ஒன்றுசேரும் காட்சி வானில் தென்படவுள்ளதாகவும் வெற்றுக் கண்களால் பார்க்கக்கூடிய இந்தக் காட்சி சூரிய அஸ்தமனத்தின் பின் சந்திரன் அஸ்தமிக்கும் வரை வானில் தென்படுமெனவும் அகில இலங்கை சோதிட ஆய்வு மன்ற முன்னாள் செயலாளர் சி.இரத்தினவடிவேல் தெரிவித்துள்ளார்.(ம-6)

# முஸ்லிம் காங்கிரஸுடன் இணைவதற்கு அஷ்ரப் காங்கிரஸ் இரு நிபந்தனைகள்

முஸ்லிம் காங்கிரஸின் தலைமையை வலுப்படுத்தி, முஸ்லிம் மக்களின் ஒற்றுமையைக் கட்டிக்காக்க நாங்கள் எதையும் விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால், அதற்காக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எமது இரண்டு நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று அஷ்ரப் காங்கிரஸ் தலைவர் எஸ்.சுபைர்தீன் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸின் யாப்பில் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அளவுக்கதிகமான அதிகாரங்களைக் குறைக்கவேண்டும் என்பது எமது முதலாவது நிபந்தனையாகும். முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர் பீடத்தில் உள்ள ஒன்பது உறுப்பினர்களின் ஆலோசனைப்படி தலைவர் தெரிவு செய்யப்படவேண்டும். இவ்விரு நிபந்தனைகளையும் முஸ்லிம் காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் நாம் இணைவதற்கு தயாராகவிருக்கிறோம்.


சமாதானப் பேச்சுக்கள் நடைபெறும் இத்தருணத்தில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதி ஒருவர் உத்தியோகபூர்வமாக அப்பேச்சுக்களில் இடம்பெறவேண்டும். தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையே உள்ள பிணக்குகளைத் தீர்க்க சகல முஸ்லிம் கட்சிகளையும் மற்றும் அமைப்புக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரமுகர்கள் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும்.

பிரிந்திருக்கும் இரு பகுதியினரும் மீண்டும் இணையப் போகிறார்கள் என வெளிவந்த செய்திகளை ஊடகங்கள் மூலம் மட்டுமே நாம் தெரிந்து கொண்டோம். கீழ் மட்டத்தில் அடிப்படையான முயற்சிகள் தொடர்ந்த போதும் உயர் மட்டத்தில் அவ்வாறான எந்தவொரு பேச்சும் இடம்பெறவில்லை.

-இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.





சீனாவை உலுப்பிவிட்டிருக்கும் 'சார்ஸ' நோய் அந்த நாட்டின் இயல்பான கலகலப்புகளை அடியோடு இல்லாமற்செய்துவிட்டது.
சன நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் கிடக்கும் ஒரு பொழுதுபோக்கு மையம்.





உல்லாசப் பயணிகளால் நிரம்பிக் காணப்படும் சீனப் பெருமதில் இப்போது வெறிச்சோடி மயான அமைதியில்...



தமது வாடிக்கையாளர்களை மீண்டும் கவர இதுபோன்ற வழிகளை நாடவேண்டிய நிலை வர்த்தக நிலையங்களுக்கு..



பயணங்களைத் தவிர்க்குமாறு அரச உத்தரவு. இதனால், விடுமுறைக் காலத்தில் உல்லாசம் புரியமுடியாத அவலம்.

# பேரழிவு ஆயுதங்கள் தொடர்பாக தகவல் தர தாரிஸ் அஸீஸ் மறுப்பு

## அமெரிக்க அதிபர் குற்றச்சாட்டு

வாஷிங்டன்,மே6

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருக்குமிடத்தைத் தெரிவிக்க முன்னாள் துணைப் பிரதமர் தாரிக் அஸீஸ மறுத்து வருவதாக அமெரிக்க அதிபர் புஷ் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

டெக்ஸாஸில் தனது பண்ணை வீட்டில் ஆஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹோவார்ட்டுடன் கூட்டாக இணைந்து செய்தியாளர்களுக்கு சனிக்கிழமை அளித்த பேட்டியில் அதிபர் புஷ் கூறியதாவது:-

பேரழிவை ஏற்படுத்தும், இரசாயன மற்றும் உயிர்க்கொல்லி ஆயுதங்கள் ஏராளமான அளவில் ஈராக்கில் மறைத்து வைக்கப்பட்டுள்ளன.

அவற்றின் இருப்பிடங்களைத் தெரிவிக்க தாரிக் அஸீஸ் மறுத்து வருகிறார். துணைப்பிரதமராக இருந்த போது உண்மையை எப்படிச் சொல்வது என்று அவருக்குத் தெரியவில்லை. அமெரிக்காவிடம் பிடிபட்டபோதும் அவருக்கு உண்மை பேசத் தெரியவில்லை.

சதாம் ஆட்சியின்போது மிகவும் பரபரப்பாக பேட்டியளித்து வந்த தாரிக் அஸீஸ் சமீபத்தில் அமெரிக்கத் துருப்புகளிடம் சரணடைந்தார்.

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பது உண்மை. கடந்த 14ஆண்டுகளுக்கு மேலாக சதாம் ஹுசைன் அவற்றை மறைத்து வந்துள்ளார். ஆயுத சோதனையாளர்கள் அவற்றை கண்டுபிடிக்க விடாமல் தடுத்து வந்துள்ளார்.

அமெரிக்காவில் உள்ள கலிபோர்ணியா மாநிலத்தின் பரப்பளவு கொண்டதுதான் ஈராக். ஆனால், அங்கு குகைகள், சுரங்கப்பாதைகள் மற்றும பல மாடிக் கட்டடங்கள் ஏராளமாக உள்ளன. அவற்றில் என்ன இருக்கிறது என்று ஆராயப்படும்.

சதாம் ஆட்சியில் முக்கிய தலைவர்களாக இருந்த 55பேரில் இதுவரை 18பேரை கைதுசெய்துள்ளோம். இவர்களில் ஒருவர்கூட பேரழிவு ஆயுதங்கள் இருப்பிடத்தைத் தெரிவிக்கவில்லை.

சதாம் எப்படி ஆட்சி நடத்தினார், அவருக்கு உதவியாக இருந்தவர்கள் யார் யார் என்பது பற்றி விவரங்களைச் சேகரித்து வருகிறோம்.சதாம் மட்டுமல்ல அவருக்கு உடந்தையாக இருந்தவர்களும் தண்டிக்கப்படுவார்கள். ஈராக்கில் ஜனநாயக ஆட்சி மலர வேண்டும் என்பதுதான் அமெரிக்காவின் விருப்பம். ஈராக் மீதான பொருளாதாரத் தடைகள் விரைவில் நீக்கப்படவேண்டும் என்றார் புஷ்.

(ஐ)

# பாதிரியாரின் உறைந்த ரத்தம் திரவமாகும் அதிசயம் ரோமில்!

ரோம்,மே6

ரோம் நகரின் புரவலராக கருதப்படும் மறைந்த பாதிரியாரின் உறைந்த புனித ரத்தம் ஆண்டுக்கு இருமுறை திரவமாகும். அப்படி திரவமானால், அந்தாண்டில் நகருக்கு பெரும் ஆபத்துக்கள் ஏற்படாது என்பது நகர மக்களின் நம்பிக்கை.

ஆண்டுதோறும் மே முதல் சனிக்கிழமையும், அவர் நினைவு நாளான செப்டெம்பர் 19ஆம் திகதியும் அவரது உறைந்த ரத்தம் திரவமாக மாறும்.

சான் ஜெனாரோ என்ற அந்த பாதிரியார் மூன்றாவது நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

ரத்தம் திரவமாக மாறுவதை காண மக்கள் கூட்டம் கூட்டமாக சனிக்கிழமை வந்தனர். பாரம்பரிய முறைப்படி ஊர்வலங்கள் நகரில் நடத்தப்பட்டன.

தேவாலயத்தில் அந்த பாதிரியாரின் மண்டையோடு வைக்கப்பட்டுள்ளது. அதன் அருகே உறைந்த ரத்தத்தை கொண்டு சென்றவுடன் அது திரவமாக மாறியது.

1988ஆம் ஆண்டு விஞ்ஞானிகள் உறைந்த ரத்தம் திரவமாவதை நேரில் கண்டு ஆய்வு நடத்தினர். அது மனித ரத்தம் தான் என்பதை மட்டுமே அவர்களால் உறுதி செய்ய முடிந்தது. ஆனால், உறைந்தது எப்படி, திரவமாக மாறியது என்பதை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

(ஐ)

# இந்தியாவுடன் போர் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்வதற்கு தயார்!

## அதிபர் முஷாரப் அறிவிப்பு

இஸ்லாமாபாத்,மே6

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு, எல்லையில் பரஸ்பரம் படை குறைப்பு செய்துகொண்டால் இந்தியாவுடன் போரில்லா ஒப்பந்தம் செய்துகொள்ள தயார் என்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் அறிவித்துள்ளார்.

பாகிஸ்தான் தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியிலேயே இதனைத் தெரிவித்தார்.

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். தெற்காசியாவை அணு ஆயுதமற்ற மண்டலமாக ஆக்க வேண்டும். இந்திய - பாக் எல்லையில் படைகளை குறைத்துக் கொள்ளவேண்டும்.

இவையெல்லாம் நிறைவேறினால் இந்தியாவுடன் போரில்லா ஒப்பந்தத்தைச் செய்துகொள்ள பாகிஸ்தான் தயாராக இருக்கிறது.

எங்கள் பாதுகாப்பில் நாங்கள் அக்கறை காட்டியாகவேண்டும். எங்கள் பாதுகாப்பில் பிரச்சினை இல்லையெனில் எல்லையில் இருநாடுகளும் படைக்குறைப்பு செய்துகொள்ளலாம். போரில்லா ஒப்பந்தம் செய்துகொள்ளலாம் என்பதே எங்கள் நிலை என்றார் முஷாரப்.

(ஐ)

# 'சார்ஸ்' கிருமி உடலுக்கு வெளியே ஒரு நாள் வரை உயிர் வாழும்

வாஷிங்ரன்,மே6

'சார்ஸ்'நோய் கிருமியானது, மனித உடலுக்கு வெளியே 24மணி நேரம் வரை இருக்கும். மனிதக் கழிவில் 4நாள்கள் வரை இருக்கும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

'வாஷிங்ரன் போஸ்ட்' பத்திரிகையில் இதுபற்றி செய்தி வெளியாகியுள்ளது.

மனித உடலில் இருந்து வெளியேறிய சார்ஸ் நோய்க் கிருமி, வீட்டின் தரையில் ஒரு நாள்வரை செயற்பாட்டுடன் இருக்கும். உலக சுகாதார அமைப்பின் இணையத் தளத்தில் இத்தகவல் ஞாயிற்றுக்கிழமை சேர்க்கப்படும்.

ஒரு மேசையின் மீதோ, கதவின் கைப்பிடியிலோ, சார்ஸ் நோய்க்கிருமி ஒட்டியிருந்தால், அந்த இடத்தைத் தொடுபவருக்கு சார்ஸ் நோய் தொற்றிக் கொள்ளும் என்று புதிய தகவல் தெரிவிக்கிறது.

(ஐ)

# குண்டுத் தாக்குதல் தொடர்பாக ஆறு பேர் லண்டனில் கைது!

ரெல் அவிவ்,மே6

இஸ்ரேலிய தலைநகரில் தற்கொலைத் தாக்குதலுடன் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்ற சந்தேகத்தில் பிரிட்டிஷ் பொலீஸார் ஆறுபேரைக் கைதுசெய்துள்ளனர்.

ரெல் அவிவ் நகரில் கடைசியாகத் தற்கொலைத் தாக்குதலை நடத்தியவர் ஒரு பிரிட்டிஷ் பிரஜை ஆவார். இவருடன் தொடர்புடைய ஆறு பேரையே லண்டன் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் லண்டன் மத்திய பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களில் மூவர் பெண்கள் ஆவர்.

(ஐ)

## இந்தியத் தூதருடன் முஷாரப் சந்திப்பு

இஸ்லாமாபாத்,மே6

பாகிஸ்தானில் இந்தியாவுக்கான தற்காலிகத் தூதர் டி.சி.ஏ.ராகவனை, அதிபர் முஷாரப், இஸ்லாமாபாத்தில் ஒரு ஹோட்டலில் ஏதேச்சையாக சந்தித்தார். அந்த ஹோட்டலுக்கு ஒரு பத்திரிகைச் செய்தியாளருடன் சென்றிருந்தார் ராகவன். அப்போது யாரும் எதிர்பாராத வகையில் முஷாரப்பும் அவரது மனைவியும் அந்த ஹோட்டலுக்கு வந்தனர். அங்கு சாப்பிட வந்தவர்களிடம் சகஜமாகப் பேசினார் முஷாரப். அப்போது தன்னை அறிமுகம் செய்துகொண்டார் ராகவன்.(ஐ)

## சவூதி இளவரசி 90ஆவது வயதில் மரணம்!

சவூதி அரேபிய இளவரசி ஹயா பிநித் சாத் அல் சுதாரி அவரது 90ஆவது வயதில் மரணம் அடைந்து விட்டார். மன்னர் அப்துல் அஜீஸ் அல்சாத்தின் பல மனைவிகளில் இவரும் ஒருவர். ரியாத்தில் இவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.(ஐ)

## பொலீஸ் அதிபர் பதவி துறப்பு!

பக்தாத்,மே6

பக்தாத்தில் சுமுக நிலையை ஏற்படுத்தமுடியாத நிலையில் அங்கு புதிதாக நியமனம் பெற்றிருந்த பொலீஸ் தலைமை அதிகாரி தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

அமெரிக்காவிடம் பக்தாத் வீழ்ச்சி அடைந்ததன் பின்னர் சுஹைர் அல் நயீமி என்பவர் பொலீஸ் அதிபராக நியமிக்கப்பட்டிருந்தார். கொள்ளையர்களிடமிருந்து இவர் மிகவும் பெறுமதி வாய்ந்த பொருள்களை மீட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புனித பாப்பரசர் ஸ்பெயின் விஜயம்



மட்றிட்,மே6

மூன்று நாள்கள் பயணம் மேற்கொண்டு புனித பாப்பரசர் ஸ்பெயின் சென்றுள்ளார்.

அலிட்லியா விசேட விமானம் ஒன்றில் ஸ்பெயின் சென்றடைந்த பாப்பரசரை மக்கள் பெரும் ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

83 வயதான பாப்பரசர் மிகுந்த தேகாரோக்கியத்துடன் தரிசனம் வழங்கினார். (ஐ)

## இடைக்கால நிர்வாகம் இம்மாதம்!

பக்தாத்,மே6

ஈராக்கில் இடைக்கால ஆட்சி இந்த மாத நடுப்பகுதியில் அமைக்கப்படும் என்று அமெரிக்காவின் ஈராக் நிர்வாகியான ஜே கார்னர் தெரிவித்திருக்கிறார்.

சகல தரப்புகளையும் திருப்திப்படுத்தும் வகையில் இந்த நிர்வாகம் அமையும் என்றும் அவர் கூறியிருக்கிறார். (ஐ)

# கொலைகள், சீரழிவுகளைத் தினமும் கண்டு மனித மனங்கள் மரத்துப் போய்விட்டனவா?

இன்று எந்தப் பத்திரிகையைப் படித்தாலும் செய்தி ஊடகங்களை செவிமடுத்தாலும் கொலைகள், கொள ளைகள், பாலியல் வல்லுறவுகள் தொடர்பான செய்திகளே முன்னணி வகிக்கின்றன.

இறைவன் கொடுத்த மதிப்பு வாய்ந்த உயிரை மனிதன் கொடிய பொழுதில் அழிக்கின்றான் முறையற்ற விதத்தில் பிறர்சொத்தை அபகரிக் கிறான். உடலுறவு என்ற யதார்த் தத்தை விடுத்து, சிற்றின்ப இச்சை களை தீர்ப்பதற்காக வல்லுறவுச் செயல்களில் ஈடுபடுகிறான்.

இவற்றின் பின்னணியில் மனித னும் மனிதமும் எங்கே சென்று கொண் டிருக்கின்றன என்று சிந்திப்பது இன் றைய காலத்தின் கட்டாயமாகும்.

இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன் ஒரு வீதியில், ஒரு கிராமத்தில் ஒரு கொலை, களவு, கற்பழிப்பு நடை பெற்று விட்டதென்றால் அந்த ஊர் முழுதும் பரபரப்பும், பீதியும், சோகமும நிலவும். மனித மனங்கள் அவற்றை வெகு இலகுவாக ஜீரணிப்பதில்லை. குற்றவாளிகள் தகுந்த தண்டனை பெறுவார்கள; சமூகத்திலிருந்து ஒதுக் கப்படுவார்கள். இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.

கொலையும் கொள்ளையும், வல்லு

## செய்திக் கட்டுரை

றவும் சர்வ சாதாரணமாகிவிட்டன. பல்லாயிரக்கணக்கான இனப்படு கொலைகளையும், அழிவுகளையும் கண்டு மனித இதயங்கள் மரத்துப் போய்விட்டனவா?

கடந்த வாரம் நாரந்தனையில் சமுர்த்தி உத்தியோகத்தரான திலக ராஜா ஜெகத்ஜனனி என்ற பெண்ணை பட்டப்பகலில் படுகொலை செய்து அவரது நகைகள் அபகரிக்கப்பட்டன.

அண்மையில் குடத்தனையில் 50 வயதான செல்லையா புவனேந்திரன தலை துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். சாவகச்சேரி மினிபஸ சங்கத் தலைவரான மக்லன் அற்புத ராஜா என்பவரை முகமூடி அணிந்த நபர்கள் அடித்தும் வெட்டியும் கொலை செய்தனர்.

சென்ற மாதம் நாரந்தனையில் தனது மனைவியையே கோடரியால் கணவன் கொத்தி கொலை செய்த கோரச் சம்பவம் இடம்பெற்றது. சென்ற ஆண்டு டிசெம்பர் மாதம் உரும்பிராய் சந்திரோதய கல்லூரி மாணவி கிணற்றி லிருந்து சடலமாக மீட்கப்பட்டார். இவ் வாறு கொலைப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இன்னும் எத் தனை உள்ளங்களில் கொலைப் பிசாசு குடிகொண்டிருக்கின்றதோ! என்ற அச்சத்தில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

முன்பொருபோதும் இல்லாதவாறு கொள்ளைச் செயல்களும் நாட்டில் கொடிகட்டிப் பறக்கின்றன. ஆயுத முனையிலும், ஆழ்ந்த உறக்கத்திலும, வழிப்பயணங்களிலும் மக்களிடம் கொள்ளையிடும் கும்பல்கள் உலாவு கின்றன.

அண்மையில் திருநெல்வேலியில நாகராசா என்பவரின் வீட்டில் 5 லட் சம் பெறுமதியான பணம், நகைகள் என்பன நள்ளிரவில் கொள்ளையிடப் பட்டன. கடந்த காலங்களில் கோவில் வீதியில் அ.தேவதாஸ் என்பவர் வீட் டில் 50 பவுண் நகைகள் களவாடப் பட்டன. வேணி களஞ்சிய உரிமை யாளர் வீட்டில் பல லட்சம் பெறுமதி யான நகைகள் சூறையாடப்பட்டன. இவ்வாறான கொள்ளைகள், களவு களால் மக்கள் பெரும் பீதியுடன் இரவைக் கழித்து வருகின்றனர்.

இவை மட்டுமல்லாது, தமிழரின் பண்பாடு, நாகரிகம், கலாசாரம் என் பவற்றைக் குழிதோண்டிப் புதைக்கும் வண்ணம் பாலியல் வல்லுறவுகளும் சேஷ்டைகளும் இடம்பெறுகின்றன. வயது வித்தியாசமின்றி ஆதரவற் றோர், மனநிலை பாதிப்புற்றோர் என்ற கருணை கூட இல்லாது பாலியல் பசிகள் தீர்க்கப்படுகின்றன. கைவிடப் பட்ட வீடுகளும், பற்றைக்காடுகளும் இவர்களுக்குச் சொர்க்கபுரியாக உள்ளன.

எமது மண்ணும், மக்களும் தமிழ இனத்தின் வீரமும், தீரமும் உலக மட்டத்தில் உன்னதமாகப் பேசப்படும போது உள்நாட்டில் நிகழும் இச் சீரழிவுகள் அனைத்து மக்களையும் தலைகுனிய வைக்கிறது.

இநநாட்டில் வேரூன்றி பெருவிருட்ச மாக வளர்ந்து நிற்கும் மதங்கள் அனைத்தும் போதிப்பவை என்ன? எல்லோரிடமும் அன்பு காட்டு, உன் னைப்போல் உன் அயலவனை நேசி, கொலை செய்யாதே, மனித மாண்பு களையும், விழுமியங்களையும் போற்று என்ற ஒத்திசைவான போதனை களையே சமயங்கள் சாற்றி நிற்கின் றன.அதன்வழி நெறிப்படுத்தப்பட்டு வாழ்ந்துவரும் சமுதாய கட்டமைப் புக்களின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்க அனுமதிக்கக் கூடாதது என சமய, சமூக ஆர்வலர்கள் ஆதங் கம் தெரிவிக்கின்றனர்.

1995ஆம் ஆண்டுக்கு முன்னைய காலங்களில் இந்த மனித விரோத, சமூகவிரோதச் செயல்கள் மிகவும் குறைந்து காணப்பட்டன. பின்னைய காலங்களில் ஏற்பட்ட அரசியல் மாற் றங்களாலும் எமது பண்பாட்டை - இனத்தின் தனித்துவத்தை - கூறு போடும் தீயசக்திகள் கண்டும் காணா திருந்த தன்மைகளாலும் இவை துரிதமாக தலைதூக்கின என்றே சொல்லத் தோன்றுகிறது.

நாம் அனைவரும் சிந்திக்கத்தெரிந் தவர்கள், புத்திஜீவிகள் என்று சொல லிக்கொள்கிறோம். யுத்த காலங்களில ஏராளமான மரணங்களைச் சந்தித் தோம். சொத்துக்கள், உடைமை களைப் பறிகொடுத்தோம். தற்போது யுத்தம் ஓய்ந்து இன அழிப்புக்கள் நிறுத்தப்பட்டிருக்கும் போது வன்மம், பகை, பொறாமையால் எம்மை நாமே அழிப்பதும் சூறையாடுவதும் முறையா எனப் பலரும் கவலை தெரிவிக்கின் றனர்.

பணத்தால் எவ்வித குற்றங்களை யும் மறைத்துவிட முடியும். ஏ-9 பாதை யால் தப்பித்துச் சென்றுவிட முடியும எனக் குற்றவாளிகள் நினைக்கிறார் கள். தற்போது நிலவும் இறுக்கமற்ற தொங்கு சிவில் நிர்வாக நடைமுறை களும் குற்றவாளிகளுக்கு சாதகமாக உள்ளன.

எனவே, இந்தச் சமூக விரோதச் செயல்களைத் தொடர்ந்தும் நாம் அனுமதிக்கக் கூடாது.மனிதத்தை மிதிக்கும் மிருகத்தனமான அடாவடி களை எமது பிரதேசங்களில் இருந்து அடியோடு களையவேண்டும். இதுவே மக்களின் உள்ளார்ந்த விருப்பமும் எதிர்பார்ப்புமாகும்.

**எஸ். யேசுதாஸ்**
கொழும்புத்துறை செய்தியாளர்

அதற்கு ஸ்திரமான, நீதியான குற் றங்களைத் தட்டிக் கேட்கும் கௌர வமான, சுதந்திரமான, பலமான நிர் வாகக் கட்டமைப்பு ஒன்றே வழி வகுக்கும்.

அப்போதுதான் மனித மாண் புகள் மதிக்கப்பட்டு, மனிதன் மனித னாக வாழும் அச்சறுத்தலற்ற சூழல உருவாகும். நிலையான சமாதானம் ஒன்றுதான் இதற்கு அடிக்கல்லாகும். நிம்மதியான தனிமனித வாழ்வைத் தேடித்தரும் விரைந்து அமைதி பெற்று பாதுகாப்புடன் வாழ சமாதானத் துக்காக உரத்துக் குரல் கொடுப் போம்.

## சித்திரத்தேர் புனரமைப்பு

தென்மராட்சி,மே6

யுத்தத்தினால் சேதமடைந்த சர சாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய தேர் புனரமைக்கப்பட்டு வருவதாகவும் -

இவ்வருட ரதோற்சவத்தில் புனர மைக்கப்பட்ட தேரில் விநாயகப் பெருமான் வீதியுலா வருவார் எனவும்- ஆலய பரிபாலன சபையினர் தெரி வித்தனர். (எ-117)

## அராலி சனசமூக நிலையத்தில் இடநெருக்கடி

அராலி மேற்கு சனசமூக நிலை யம் கட்டட வசதியற்ற நிலையில் பெரும் சிரமத்தின் மத்தியில் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சனசமூக நிலையக் கட்டடத் திலேயே சிறுவர் பாடசாலை, மாதா சங்கம், இளைஞர் முன்னேற்றக் கழ கம், விவசாய சம்மேளனம், மாதர் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் தையற்பயிற்சி நெறி மற்றும் மாலை நேர வகுப்புகளும் இயங்கி வரு கின்றன.

இதனாலேயே மேற்படி நிலை யத்தில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-14)

## ஆஞ்சநேயர் ஆலயத்துக்கு வாயிற்கோபுரம்

வலி.தெற்கு,மே6

மருதனார்மடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்துக்கு வாயிற்கோபுரம் அமைக்கப்படவுள் ளது.

சுமார் 12லட்சம் ரூபா செலவில் இவ்வாயிற் கோபுரம் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் ஆரம்பமாகி உள்ளன.

வாயிற்கோபுர கட்டடத்துக்கான அத்திவாரக் கல்லை இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி. மகேஸ்வரன் அண்மையில் நட்டு வைத்தார்.

வாயிற்கோபுர அமைப்புப் பணிகள விசேடமாக இந்தியாவில் இருந்து வருவிக்கப்படவுள்ள சிற்பாசிரியர் களால் மேற்கொள்ளப்படவுள்ளதாக கூறப்படுகிறது. (ம-152)

சுடர் ஒளி 11.05.2003 இதழில்

விலை 16/=




- தடையகலா ஏக்கத்துடன் மக்கள் முகாமமைக்க முனைகின்ற படைகள்
- இராணுவ உளவாளிகள் கொலை மர்மம் நீடிப்பு; அரசுக்கு சவால்
- ஆனையிறவு மீட்பு நிகழ்வு நினைவில் பதிந்த வரலாறு
- திருமலை மாணவி மதுரையில் படுகொலை வேலியே பயிரை மேய்ந்த கொடுமை
- ஆயுதங்கள் உரிமைகளை பாதுகாக்காது! படைக்கட்டமைப்பு பிணக்கை நீடிக்குமாம்!
- அடக்கியாள்வோர் நினைக்கும் வழிமுறையும் மக்களுக்காக துயர் சுமக்கும் தலைமுறையும் (நேரடி)
- விரிசலை ஏற்படுத்த முனையும் சக்திகள் புரிந்துணர்வு மனநிலையில் சமூகங்கள்
- அதிசயம்! ஆனால் உண்மை!! (நவீன - வியத்தகு - தகவல்களுடன் கூடிய பக்கம் )

மற்றும் அரசியல் அம்பலம், திருகோணேஸ்வர திருத்தல் யாத்திரை, இணையத்தளங்களிலிருந்து..., க்ரைம் டயறி, மசாலா மிக்ஸ், பித்தன் பதில்கள், சொற்சிலம்பம், கவிதைப் புனல், சினிமா, பெண், மலையகக் கண்ணோட்டம், இளஞ்சுடர், சதாம் தொடர், அலைகளின் காவியம், ராசிபலன், கலையமுதம், விளையாட்டு... இன்னும் பல சுவையான அம்சங்களுடன்...

(சி-27699)

உதயன்

# மனிதாபிமான ரீதியில் பிரச்சினைகளை அணுகுங்கள்!

யாழ். நகரின் மத்தியில் சுபாஷ் ஹோட்டல், ஞானம்ஸ் ஹோட்டல் மற்றும் அவற்றின் சுற்றாடலில் அமைந்துள்ள 512 ஆவது பிரிகேட் படைத் தளத்தை யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டைப் பகுதிக்கு அப்படியே இடம்மாற்ற அரசு முடிவு செய்திருக்கின்றது.

முகாமை இடம்மாற்றுவதற்கு அரசு தேர்ந்தெடுத்திருக்கும் இடத்துக்கு தமிழ் மக்கள் மத்தியிலிருந்து பலத்த எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

யாழ்.நகரின் மத்தியிலிருந்து படைமுகாம் அகற்றப்படவேண்டும் என்பதில் இருவேறுவித கருத்துகள் இல்லை.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தப்படி, மக்கள் செறிவாக வாழும் யாழ்.நகரம் போன்ற பிரதேசங்களில் வழமை நிலை ஏற்படுத்தப்படுவதற்காக அங்குள்ள இராணுவ முகாம் எப்போதோ அகற்றப்பட்டிருக்க வேண்டும்.

அதை இழுத்தடித்து, இழுத்தடித்து - செயற்படுத்தாமல் சாக்குப்போக்குச் சொல்லி - வந்த அரசுத் தரப்பு, இப்போது தமிழர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளான புலிகளிடமிருந்து நெருக்குதல் கழுத்துக்கு வந்ததும், முகாமை நகரின் மத்தியிலிருந்து இடம்மாற்றுவது போல 'பாவ்லா' பண்ணுகின்றது; முகாமை இடம்மாற்றுவதற்கு இடத்தைத் தேர்ந்தெடுப்பதில் நெருக்கடியை ஏற்படுத்தி, குழப்பத்தை உண்டுபண்ணுவதன் மூலம் நகர மத்தியிலிருந்து முகாமை இடம்மாற்றும் நடவடிக்கையைச் செயற்படுத்தாமல் தள்ளிப் போடவைக்க முயற்சிக்கின்றது.

தற்போதைய முகாமை யாழ்.டச்சுக் கோட்டைக்கும் அதைச் சுற்றியுள்ள பிரதேசத்துக்கும் இடம்மாற்றுவதற்கு அரசுத் தரப்பு ஒரு தலைப்பட்சமாக முடிவுசெய்து அதைச் செயற்படுத்த முனைவது இந்தப் பின்னணியில்தான்.

தற்போதைய இடத்திலிருந்து கோட்டைப் பகுதிக்கு இராணுவமுகாம் இடம்மாறுவது யாழ்.நகர மக்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு உரிய விடிவையோ, வழமை நிலையையோ ஏற்படுத்திக் கொடுக்கப் போவதில்லை. மாறாக அவர்களைப் பொறுத்தவரை எண்ணெய்ச் சட்டியிலிருந்து அடுப்பில் விழுந்த கதையாகத்தான் அது இருக்கும்.

கோட்டையையும் அதை அண்டிய பிரதேசங்களையும் இராணுவம் ஆக்கிரமிப்பதால் ஏற்படக் கூடிய பாரதூர விளைவுகளை - யாழ்.மக்களின் வழமையான வாழ்க்கை முறையில் அது ஏற்படுத்தக் கூடிய பாதிப்புக்களை - யாழ்ப்பாணத்தில் உள்ள பல பொது அமைப்புகள் விலாவாரியாக எடுத்துக்காட்டியுள்ளன. நேற்று யாழ்.கோட்டைக்கு அருகே நடந்த எதிர்ப்பு நடவடிக்கை அந்த வகையில் மக்களின் மனவுணர்வுகளை வெளிப்படுத்தும் ஒரு நிகழ்வே.

யாழ்.கோட்டைக்கு படைத்தளத்தை மாற்றும் முடிவை புலிகளும் கடுமையாக ஆட்சேபித்துள்ளார்கள். அதற்கான காரணங்களையும் அவர்கள் அரசுக்குத் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

எனவே, இது விடயத்தில் புலிகளுடன் மேற்கொண்டு ஆக்கபூர்வமான கலந்துரையாடலை நடத்தி, தமிழ் மக்களுக்கும் அவர்களின் அதிகாரபூர்வமான பிரதிநிதிகளான புலிகளுக்கும் இணக்கமான ஒரிடத்துக்கு இந்த முகாமை மாற்றுவதற்கு அரசு முயற்சி எடுக்கவேண்டும்; அதற்கான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளவேண்டும்.

அதைவிடுத்து, இதுவிடயத்தில் மக்களினதும் புலிகளினதும் கருத்துக்களை ஒதுக்கி, உதாசீனப்படுத்திவிட்டு, அரசு தன்பாட்டில் தனது நடவடிக்கைகளைத் தொடர்ந்தால் அது மக்கள் மத்தியிலும், புலிகள் மத்தியிலும் பெரும் கசப்புணர்வையும் அதிருப்தியையும் ஏற்படுத்தும்.

அவ்வாறான நிலைமை தற்போதைய சமாதான முயற்சிகளை மேலும் இக்கட்டில் மாட்டச் செய்து பாதிப்புக்களை ஏற்படுத்தும்; விபரீத விளைவுகளுக்கு கால்கோள் இட்டுவிடும்.

எனவே, அரசுத் தரப்பு தனது படை அதிகாரிகளின் இராணுவ ரீதியலான விளக்கங்கள், வியாக்கியானங்களை மட்டும் செவிமடுக்காமல் சமாதானப் பாதைக்கு வழிசெய்யும் மனிதாபிமான நோக்கிலும் இந்தப் பிரச்சினையை அணுகி, அதற்கு சுமுகத் தீர்வுகாண முன்வரவேண்டும்.

அதுதான், தற்போது இடைநிறுத்தப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்களை முண்டு கொடுத்து முன்நகர்த்த உதவும் என்பதையும் அரசுத் தரப்பு புரிந்துகொள்ளவேண்டும்.

யுத்த அனர்த்தங்களால்

## பளை பல நோ.கூ.சங்கத்துக்கு ரூ.ஒரு கோடி 12லட்சம் இழப்பு

தென்மராட்சி,மே6

பள்ளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால் ஒரு கோடியே 12லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தின் தலைமைக்காரியாலயம், மொத்தக் களஞ்சியம், கிராமிய வங்கி, மாநாட்டு மண்டபம்,கிளைக்கடைகள் அனைத்தும் பலத்த சேதங்களுக்கு இலக்காகியுள்ளதாகவும் -

இதனால், ஒரு கோடி ஒன்பது லட்சம் ரூபா பெறுமதியான கட்டடங்களுக்கும், நுகர்ச்சிப் பொருள்களுக்கும், தளபாடங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது என்றும் - கூறப்பட்டது.

சங்கத்தின் முகமாலை, கிளாலி ஆகிய கிளைக் கடைகள் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பளைப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்துவரும் பகுதிகளில், தனியார் கட்டடங்களில் கிளைக் கடைகள் ஆரம்பிக்கப்பட்டு வருவதாகவும் -

சங்கத்தின் மாநாட்டு மண்டபம் புனரமைக்கப்பட்டு தலைமை அலுவலகம், கிராமிய வங்கி ஆகியவை மீண்டும் இயங்கத் தொடங்கிவிட்டன என்றும் - சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 12வருடங்களின் பின்னர் மக்கள் மீளக் குடியமர்ந்து வரும் இயக்கச்சி, சங்கத்தார்வயல் ஆகிய இடங்களில் புதிய கிளைக் கடைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## நாட்டு நடப்பு

### கல்வித் தொண்டே கடவுள் தொண்டு

ஒழுகிடும் ஓலைக் கொட்டில்
ஓரிரு ஒடிந்த வாங்கு
பழுதற இருந்து கற்க
பாய்கூட அங்கேயில்லை
முழுதுமாய் தண்ணீர் தேடின்
முன்வீட்டுக் கிணறே தஞ்சம்
ஊரின் நடுவனாய் ஓர்
உயர்ந்த கோபுரமும் கட்டி
பாரிய தீர்த்தக் கேணி
பலருமாய் கூடி வெட்டி
தேரினுக்கு அடிக்கால் நாட்டும்
திருத் தொண்டு செய்கின்றார்கள்
கல்வியே தெய்வம் என்று
கருதுவாரை இவ்வூரில் காணேன்
நல்ல எம் கல்வி ஓங்கில்
நலம் பெற்று ஊரே ஓங்கும்
வல்ல நல் ஈசனாரும்
வந்திங்கு தங்குவாரே!

- விகடகவி.

# நிவாரணம் வழங்குவது தாமதமடைவதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் பொறுப்பு அல்ல

உலர் உணவு நிவாரணப் பொருள்களை உரிய நேரத்தில் பாவனையாளர்களுக்கு விநியோகிப்பதில் ஏற்படும் தாமதங்கள் குறித்து கட்டைவேலி - நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் விளக்கமளித்திருக்கின்றது.

சங்கத்தின் பொது முகாமையாளர் உதயனுக்கு அனுப்பியுள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

24.04.2003ஆம் திகதி 'உதயன்' பத்திரிகையில் 'பெப்ரவரி மாத நிவாரணம் இன்னமும் வழங்கி முடியவில்லை - செயலக வட்டாரங்கள் தகவல்' என்ற தலைப்பில் வெளியான செய்தி பற்றி கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் தனது நிலைப்பாட்டைத் தெரிவித்துக்கொள்கின்றது.

பத்திரிகைச் செய்தியில் குறிப்பிட்ட உரிய நிவாரண ஒதுக்கீடுகள் தொடர்பான பட்டியல் சம்பந்தமாக பின்வரும் விவரங்களைக் குறிப்பிடுகின்றோம்.

1. எமது சங்கத்திற்கு (112ஏபி) பெப்ரவரி மாதத்திற்குரிய ஒதுக்கீடுகள் தொடர்பான பட்டியல் 10.04.2003 ஆம் திகதியே வழங்கப்பட்டது.

2. இதற்குரிய பொருள்களின் விநியோகப் பட்டியல் 21.04.2003 ஆம் திகதியே வழங்கப்பட்டது.

3. மார்ச் மாதத்திற்குரிய எதுவித பட்டியலும் இன்றுவரை வழங்கப்படவில்லை.

4. அரச பிரதான களஞ்சியத்தில் வெள்ளைச் சீனி இருப்பில் இல்லாதிருந்தது.

இந்நிலையில், சித்திரைப் புத்தாண்டிற்கு முன்னர் பெப்ரவரி மாத நிவாரண விநியோகத்தை முடிவுறுத்த முடியாது என்பது தெளிவாகின்றது.

எமது சங்கம் பெப்ரவரி மாதத்திற்குரிய நிவாரணத்தையும் தற்போது வழங்கியுள்ளது.

மக்களுக்கு உரிய நேரத்தில் நிவாரணப் பொருள்கள் கிடைக்காமல் இருப்பதற்கும் களஞ்சியத்தில் பொருள்களைத் தொடர்ந்து வைத்திருக்கவேண்டிய நிலை உள்ளதற்கும் கூட்டுறவுச் சங்கங்கள் பொறுப்பாகமாட்டா என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# புலிகளை மீண்டும் பேச்சு மேசைக்கு அழையுங்கள்!

## பிரதமரிடம் சைவக்குருமார் அர்ச்சகர்சபை வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,மே6

விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சு மேசைக்கு அழையுங்கள்.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுததுள்ளது அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர்சபை.

மேற்படி அர்ச்சகர்சபையின் சார்பில் அதன் உபதலைவர் சிவஸ்ரீ க.சுந்தரராஜக்குருக்கள் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

போர்தொடர்பான பயம் மீண்டும் எமது மனங்களை ஆக்கிரமிக்கத தொடங்கிவிட்டது.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் கைச்சாத்திடப்பட்ட சமாதானத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் வடக்கு - கிழக்கு மக்கள் மன அமைதியுடன் வாழ்ந்து வருகின்றனர்.

ஆனால், தற்போது விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களில் பங்குகொள்வதைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக அறிவித்திருப்பதை அடுத்து நாட்டு மக்கள் மத்தியில் மீண்டும் பய உணர்வு ஏற்பட்டுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக, யுத்த சூழல் காரணமாக நாம் பெரும் துன்பங்களை அனுபவித்து வந்துள்ளோம். தொடர்ந்தும் இந்த நிலை வேண்டாம்.

எமக்கு இப்போது தேவைப்படுவதெல்லாம் சமாதானம் ஒன்று மட்டுமே. நாங்கள் உங்களை தாழ்மையாக வேண்டிக் கொள்வது, மீண்டும் விடுதலைப் புலிகளை பேச்சு மேசைக்கு அழைக்கவேண்டும் என்பதுதான்.

நங்கள் மிகுந்த மன உறுதியுடன் ஆரம்பித்த சமாதானப்பேச்சுக்கள் பாராட்டப்பட வேண்டியவை; வரவேற்கத்தக்கவை. தங்களது முயற்சிகளை சர்வதேச சமூகம் இன்று பாராட்டுகின்றது.

புலிகள் சமாதானப் பேச்சுக்களில் பங்கு பற்றாமைக்குக் காரணம் இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களில் சென்று மீளக்குடியமர முடியாதநிலை ஏற்பட்டமை மற்றும் வடக்கு - கிழக்கு பகுதிகள் வழமை நிலைக்குத் திரும்பாமை, வாஷிங்ரனில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்காமை என்பவையே ஆகும்.

எனவே, மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்து கூடிய விரைவில் சமாதானத்தை நிலைநிறுத்த உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது.(எ-ரி-28)

## வீதிதிருத்த குவித்த கற்களால் சாவகச்சேரியில் விபத்துக்கள்

தென்மராட்சி,மே6

திருத்த வேலைக்கென வீதியின் இரு மருங்கிலும் பறிக்கப்பட்டுள்ள கற்களால் தினமும் விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி சந்தியிலிருந்து நுணாவில் ஏற்றத்தடிவரை வீதியின் இருமருங்கிலும் கற்கள் பறிக்கப்பட்டு வருவதால், ஏ-9 வீதியில அடிக்கடி போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டு விபத்துக்கள் ஏற்படுகின்றன.

மேற்படி வீதியும் மோசமாகச் சேதமடைந்து காணப்படுவதால், வேகமாக வரும் மோட்டார்சைக்கிள்கள் கட்டுப்பாட்டை இழந்து கற்குவியலுக்கு மேல் ஏறி விபத்து ஏற்படுவதாகவும் - கூறப்பட்டது.

இவ்வாறு விபத்துக்களில் காயமடைந்த பலர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருவதைக் காணமுடிகிறது. (எ-117)

**நாளை**

சித்திரை 24
புதன்கிழமை
07.05.2003
திதி : ஷஷ்டி
பின்னிரவு 1.21 வரை
நட்சத்திரம் : புநர்பூசம்
முன்னிரவு 10.22 வரை
ஷஷ்டி விரதம்
சுபநேரம் : 4.25-5.55
ராகுகாலம் : 11.55-1.25
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

அதிகம் வாக்குறுதி அளிப்பவனிடம் எதையும் பெரிதாக எதிர்பார்க்காதே!

## பத்திமா அன்னை உற்சவத்தை முன்னிட்டு செபமாலைப் பேரணி

### பண்டத்தரிப்பில் இடம்பெறும்

சண்டிலிப்பாய்,மே6

பண்டத்தரிப்பு புனித பத்திமா அன்னை ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இதேவேளை - புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆலயத்தின் திறப்பு விழா எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 5.30மணிக்கு நடைபெறவுள்ளது. யாழ்.மறைமாவட்ட ஆயர் அதிவண.தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை இதனை திறந்துவைப்பார். மன்னார் மாவட்ட ஆயர் அதிவண.இராயப்பு யோசவ் ஆண்டகையும் இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இத்திறப்பு விழாவை முன்னிட்டு நான்கு இடங்களிலிருந்து செபமாலை பேரணிகள் புறப்பட்டு ஆலயத்தை வந்தடையவுள்ளன.

சண்டிலிப்பாய் புனித திரேசம்மாள் ஆலயத்திலிருந்தும், அள்வெட்டி புனித சூசையப்பர் ஆலயத்திலிருந்தும், பண்டத்தரிப்பு சந்தியிலிருந்தும், பெரியவிளான் சந்தியிலிருந்தும் இந்த செபமாலை பேரணிகள் 13 ஆம் திகதியன்று பிற்பகல் ஆரம்பமாகி ஆலயத்தை வந்தடையும் என்று பங்குத்தந்தை அருட்திரு. ம.பெ.ஞானரத்தினம் அடிகளார் இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார். (எ-135)

உ
சிவமயம்



# புங்குடுதீவு தென்பெருந்துறை
# அருள்மிகு சதானந்தசிவன் தேவஸ்தானம்
## (அரசினர் வைத்தியசாலைக்கு அருகில்)
## புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா
# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

திருமந்திரம்
உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே

**சிவன் மெய்யடியார்களே!**

சிவபூமி எனவும் தென்கைலாயம் எனவும் சிறப்பித்துக் கூறப்படும் ஈழமணித்திருநாட்டின் தமிழ் பண்பாடு, கலாசாரம், சைவ ஒழுக்கநெறி சிறந்து விளங்கி, தானமும் தருமமும் சிறந்து அறநெறி பொழிந்து விளங்கும் தீவகத்தில் இரத்தினத் தீவாக விளங்கிடும் புங்கையம்பதியின் தென்பெருந்துறையில் சிவலிங்கவடிவாய் கோயில் கொண்டு எழுந்தருளி தன்னை நாடிவந்த அடியவர்களுக்கு அருள்பாலித்துவரும், அருள் மிகு சதானந்தசிவனுக்கு ஸ்வஸ்தி ஸ்ரீ சர்வமங்கள சுபானு வருடம் சித்திரைத் திங்கள் 25ஆம் நாள் (08.05.2003) வியாழக்கிழமை பூச நட்சத்திரமும் சப்தமித் திதியும் அமிர்தசித்த யோகமும் அமைவுறும் காலை 8.55 மணிமுதல் 9.55 மணிவரையுமுள்ள மிதுனலக்கின சுபமுகூர்த்த வேளையில் மஹாகும்பாபிஷேகம் நிகழ்த்த திருவருள் கைகூடியுள்ளதால் சிவனை மனதில் தியானித்து கும்பாபிஷேகத்தையும் அதன் முன் பின் நடைபெறும் கிரியைகளையும் தரிசித்து மண்ணில் நல்ல வண்ணம் சகல செல்வமிக்க பேரானந்தப் பெருவாழ்வு வாழ சிவலிங்க சொரூப தென்பெருந்துறையானைப் பிரார்த்திக்கின்றோம்.

## கிரியா நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 24ஆம் நாள் (07.05.2003) | : | புதன்கிழமை மாலை 4.00 மணிமுதல் கர்மாரம்பம். விநாயகர் வழிபாடு, அனுஞ்ஞை, திரவியசுத்தி, திரவியவிபாகம் கணபதி ஹோமம். நவக்கிரகஹோமம். |
| மாலை4.30 மணி | : | வாஸ்துசாந்தி அங்குரார்ப்பணம், ரட்சாபந்தனம், பிரசன்னபூசை, கும்பஸ்தாபனம், யாகபூஜை அக்கினி விஜனம் விசேட திரவிய ஹோமம் வேத திருமுறை பாராயணம். |
| மாலை 5.00 மணி | : | பி.ப. 5.00 மணிமுதல் 7.00 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் |
| 25 ஆம் நாள் (08.05.2003) | | காலை 7 மணிக்கு புண்ணியாக வாசனம் விம்பசுத்தி, ரட்சாபந்தனம், நியாசம், ஸ்பர்சாஹுதி மஹாபூர்ணாகுதி, தீபாராதனை, வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம், கும்ப வீதிப் பிரதட்சணம். |
| காலை 8.55 - 9.55 | : | தூபி அபிஷேகம், மஹா கும்பாபிஷேகம். |
| காலை 10.00 - 10.30 | : | ஆசியுரை: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பிரமாசாரிய சுவாமிகள்** (குருமகா சந்நிதானம் - நல்லை ஆதீனம்) |
| காலை10.45 - 11.40 | : | மஹா அபிஷேகம் தீபாராதனை வேத திருமுறை பாராயணம் |
| நண்பகல்12.00 மணி | : | அன்னதானம் வழங்கல் |
| கும்பாபிஷேக பிரதம குரு | : | கிரியாகிரமஜோதி, கிரியாபக்திமணி, கானப்பிரியன் **பிரம்மஸ்ரீ தானுவாசுதேவக் குருக்கள்** (சட்டநாதர் சிவன் தேவஸ்தானம். நல்லூர்) |
| சர்வபோதகர் | : | **வேதசிவாகம ஞானபாஸ்கரன் பிரம்மஸ்ரீ தானுமகாதேவக் குருக்கள்** (காயத்திரிபீடம். இணுவில்) |
| ஏனைய குருமார் | : | **நாகேந்திர அருணோதயக் குருக்கள்,** (சிவன் தேவஸ்தானம். பெருங்காடு. புங்குடுதீவு) **சோ.வேணுகோபாலசர்மா** (புங்குடுதீவு) **கு.உமா சுதசர்மா** (கைதடி) |
| மங்கள வாத்தியம் | : | இசை மேதை S.S.**ஆனந்தன்** குழுவினர், புங்குடுதீவு. நயினாதீவு. |

ஒலி அமைப்பு
செ.ரவிந்திரன்,
ஸ்ரீ ஐயனார் சவுண்சேவிஸ், புங்குடுதீவு.

ஒளி அமைப்பு
பூ.வசீகரன், புங்குடுதீவு.

*குறிப்பு:* ஆலயத்துக்குத் தேவையான பால், தயிர், இளநீர், பூ, பூமாலை முதலிய பொருள்களை பக்தர்கள் கொடுத்துதவி ஆசாரசீலர்களாக வருகைதந்து சிவனின் கருணையைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 10 தினங்கள் மண்டலாபிஷேகமும் 11 விதுகாபிஷேகமும் நடைபெற உள்ளதால் அடியார்கள் கலந்து எம்பெருமானின் இறையருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

ஆலய தர்மகர்த்தா த.சு.சபாரத்தினமும்
பரிபாலனசபையினரும்
புங்குடுதீவு.

(17533)

மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் சிறப்புற வாழ்த்துபவர்:
**மகாராணி பட்டுச்சோலை**
இல.50, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021-222 3104

## பெயர்மாற்ற அறிவித்தல்

இதுவரை காலமும் *வரப்பிரகாசம் பேபிராணி* என்ற பெயரினால் அழைக்கப்பட்ட நான், இன்றுமுதல் **வரப்பிரகாசம் பபிராணி** என்ற பெயரினால் அழைக்கப்பட உள்ளேன் என்பதை எல்லோருக்கும் அறியத்தருகின்றேன். ஆகையினால், இன்றிலிருந்து எல்லாத் தொடர்புகளும் **வ.பபிராணி** என்றே கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*கச்சாய் வடக்கு,* தகவல் ஒப்பம்:
*கொடிகாமம்.* (17561) **வரப்பிரகாசம் பபிராணி.**

உ

## 2ஆவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு
## தம்பாட்டி, ஊர்காவற்றுறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய
## விசேட நிகழ்வுகள்

இலங்கையில் நடைபெறும் 2ஆவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு தம்பாட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பஜனைக் குழுவினர் கடந்த (04-05-2003) ஞாயிற்றுக்கிழமை எமது ஆலயத்தில் இருந்து புறப்பட்டு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பிரசித்திபெற்ற நாரந்தனை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயம், புளியங்கூடல் மகாமாரி அம்மன் ஆலயம், புளியங்கூடல் இந்தன் பிள்ளையார் கோயில், கரம்பன் காளி அம்மன் கோயில், ஊர்காவற்றுறை சிவன் கோயில், ஊர்காவற்றுறை வைத்தியசாலை வைரவர் கோயில், நாரந்தனை வடக்கு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்மன் ஆலயம் என்பவற்றுக்குச் சென்று திரும்பியுள்ளார்கள்.

அத்துடன், தம்பாட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இன்று (06-05-2003) செவ்வாய்க்கிழமை பகல் அன்னதானமும், சமய சொற்பொழிவும், விசேட பூஜையும் இடம்பெறுகின்றது.

*அடியார்கள் வருக! அருள் பெறுக!!*

தம்பாட்டி,
ஊர்காவற்றுறை. (17563) **- ஆலய பரிபாலன சபை.**

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின்
பாதுகாப்பு உத்தியோகத்தர்
அமரர் **ஆறுமுகம் கணேசமூர்த்தி**

அவர்களின் திடீர் மறைவு எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கி பெருங்கவலையில் ஆழ்த்தியுள்ளது. அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும், துயருறும் அவரது குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிப்பதுடன், ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*தே.வீ.அ.அ.சபை,* **தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை**
*யாழ்ப்பாணம்.* (17570) **உத்தியோகத்தர்கள்.**

## கண்ணீர் அஞ்சலி

*எமது பாடசாலை அதிபர்* **திரு.ஆ.குமாரசாமூர்த்தி** *அவர்களின் அன்புச் சகோதரர்*
**ஆறுமுகம் கணேசமூர்த்தி**

அவர்கள் 05.05.2003 அன்று இயற்கையெய்தியமையையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*யா/வியாவில் சைவ வித்தியாலயம்,* ஆசிரியர்கள்,
*காரைநகர்.* (17574) மாணவர்கள்.

## இரண்டாம் வருட நினைவஞ்சலி

தாயின் மடியில் 1934 - 01 - 04



இறைவன் அடியில் 2001 - 05 - 12

**அமரர் A.R.வேலுப்பிள்ளை சோமசுந்தரம் (A.R.V.S)**
திதி: 06-05-2003

ஆண்டுகள் இரண்டென்ன
ஆயிரம்தான் வந்திடினும்
நீண்ட நம் நினைவுகளில்
நிலைத்திருக்கும் உன் உருவம் - எமை
ஆண்டவனே ஐயா! உமையிழந்து
அவனியிலே வாழ்ந்தென்ன?
பூண்ட உன் புன்சிரிப்பு
புதிதல்ல எங்களுக்கு - நிதம்
வேண்ட வருவாயா? நம் வேதனை தீராதா?
தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

*A.R.V.S. பொன்னாவளை,* அன்பு மனைவி, பிள்ளைகள்,
*களபூமி, காரைநகர்.* மருமகன், பேர்த்தி.

(17568)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் கணேசமூர்த்தி

*(தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்)*

வாரிவளவு, காரைநகரைப் பிறப்பிடமாகவும் இடைப்பிட்டி, காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கணேசமூர்த்தி நேற்று (05.05.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சற்குணநாயகியின் அன்புக் கணவரும் கஜமுகன், சுதர்ஷன், தமேஸ்வரன் (யாழ்.இந்துக்கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வாரிவளவைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் மகேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் இடைப்பிட்டியைச் சேர்ந்த சிவதாசன் (தேவர்) - காலஞ்சென்ற மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2003) செவ்வாய்க்கிழமை காலை 10.00மணியளவில் இடைப்பிட்டி, காரைநகரிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புதுறோட்,* தகவல்:
*இடைப்பிட்டி, காரைநகர்.* (17560) மனைவி, பிள்ளைகள்.

# புற்றுநோய்க்கு அருமருந்து

வில்வ மரம் சிவனுக்கு உகந்ததால் 'சிவத்துருமம்' என அழைக்கப்படுகிறது. பொதுவாக வில்வ மரத்தை தெய்வீக விருட்சங்களாகப் போற்றி வணங்குவதால் ஆலயங்களில் மட்டுமே வளர்ப்பது ஐதீகம். வில்வ மரங்களை கன்றுகளின் மூலம் வளர்க்கலாம். வீட்டின் முன்புறம் கன்றுகளை நட்டு துளசிமாடம்போல் வில்வமாடம் வைத்து வழிபட்டுப் பயன் பெறலாம். சிவ வழிபாட்டின் முதற் பொருளான 'வில்வம்' மரத்தை பார்த்தாலும், தொட்டாலும் 'அதீத சக்தி' (Cosmic Power) உடலுக்கும் உள்ளத்துக்கும் கிடைக்கிறது என்பது மகிஷிகளும் ஆசாரியர்களும அனுபவபூர்வமாக அறிந்த உண்மை.

'மகாவில்வ தரிசனம்' என்பது சிவ தரிசனத்திற்கு இணையானதாகும்.'சிவஸ்துதி' எனும் மந்திரத்தில் 'ஏக வில்வம் சிவார்ப்பணம்' என்று குறிப்பிடப்பெறும் வில்வம் சிவமூலிகைகளுள் சிகரமான மூலிகையாகும்.

மூன்று இதழ்களைக் கொண்டு தோற்றமளிக்கும் வில்வம் சிவபெருமானின்'முக்கண்'களை குறிப்பதாகச் செயல் என்பர்.


பத்து இதழ்களைக் கொண்ட 'மகா வில்வத்தை' கரங்களிலே கொண்டு சிவனைப் போற்றி வாயார மனதார அர்ச்சித்த பத்துத் தலை இராவணன் சாகாவரம் பெற்றான். இப்படி வல்லமை பெற்றவனை மகா விஷ்ணுவே 'இராம வதாரம்' எடுத்துத்தான் அழிக்க முடிந்தது.

மனித உடம்பின் பிரதான உறுப்புக்களான மூளை, இருதயம், வயிறு, நுரையீரல், நரம்புகளுக்குச் சிதைவு நேராமல் சீராகச் செயற்பட வில்வ மரம் உதவுகிறது.

சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் வில்வமரம் விதை விதைத்து வினை தீர்த்துக்கொள்ளலாம்.

### வில்வ இலை

'யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை' என்று திருமூலர் போற்றுவது 'மகாவில்வ தளம்' என்பதில் ஐயமில்லை. புலிக்குப் பயந்து மரத்தின் உயரே இருந்து இரவு பூராவும் தூங்காமல் இருக்க வில்வ மரத்தின் இலைகளைப் பிய்த்துப் போட்ட குரங்கு, தன்னையறியாமல் செய்த பூஜையின பலனாலே(அடுத்திநிலை) முகுந்தர் சக்கரவர்த்தியானது என்று புராணம் கூறும்.



சிவனடியார்கள் போற்றுவார்கள். இதேபோல் 5,7,10 இதழ்களைக் கொண்ட வில்வ மரங்களும் உண்டு. இவை அனைத்தும் சிவ தத்துவத்தை விளக்கும் அம்சமாக உள்ளவை என்று சமய நூல்கள் போற்றும். தல விருட்சங்களுள் மகாவில்வம், கயிலையங்கிரிக்குரியதாகும். மூவிலை கொண்ட வில்வத்தை தரிசித்தால் ஒரு சிவாலய தரிசனத்துக்கு இணையாகும் என்பர். 10தளம் கொண்ட மகா வில்வத்தைத் தரிசனம் செய்வது என்பது 108 சிவாலயங்களை வலம் வந்த புண்ணியச்

வில்வ இலைகள் பறிந்த பின் எட்டு நாள் வரை பிராணவாயுவை வெளிவிடுகிறது.

வில்வ இலைகளைக்கொண்டு இறைவனை அர்ச்சித்து அதில் பத்து இலைகளை எடுத்து வாயிலிட்டு மென்று சிறிது வெந்நீருடன் 2தேக்கரண்டி தேன் கலந்து விழுங்கவேண்டும். அதன்பின் ஒரு மணி நேரம் எதுவும் சாப்பிடக்கூடாது. இவ்வாறு ஒன்று அல்லது இரண்டு மண்டலம் சாப்பிட்டு வந்தால் மனக் கோளாறு காரணமாக உடல் நலிவுற்றோர்கள், பிரச்சினைகளில் மூழ்கி உடலையும் உள்ளத்தையும் சீரழித்துக் கொண்டவர்கள், உள்மனச் சுமைகளை (depression) களைந்து சமநிலை அடைவார்கள். இந்த முறையைப் பின்பற்றும் போது மாமிச உணவு, புகை, ம கண்டிப்பாக ஆகாது.

சித்தம் கலங்காதிருக்க உதவும் வில்வம் பித்தம் தணியப் பெரிதும் உதவுகின்றது. பித்தம் மூளையைப் பீடிக்கும் போது சித்தப்பிரமையும், வயிற்றைப்பற்றும் போது குடற்புண்ணும், சருமத்தைத் தாக்கும் பொழுது சரும நோய்களும், தொழு நோய்களும் உண்டாகின்றன. பித்த சம்பந்தமான அனைத்து நோய்களைத் தடுக்கவும், அகற்றவும் கீழ்க்கண்ட முறை முற்றிலும் பயன் அளிக்கிறது.

பசுமையான வில்வ இலைகள் 10, சீரகம் 2சிட்டிகை வைத்து அரைத்து சிறு உருண்டையாக்கி காலையில் வெறும் வயிற்றில் தண்ணீர், மோருடன் பருகி வர 2 மாதங்களில் மிக நல்ல பலனைக் காணலாம்.

வில்வ இலைகள் 20, மிளகு 10, சீரகம் 2சிட்டிகை சேர்த்து அரைத்து பசு வெண்ணெய் கலந்து தினசரி காலையில் சாப்பிட, 3மாதங்களில் நிவாரணம்பெறலாம்.

100ஆண்டுக்கு மேல் வயதான வில்வ மரத்தின் இலைகளைச் சாப்பிடடால் புற்றுநோய் அகலும்.

வில்வ இலைகள் 5, மிளகு 2 சேர்ந்து வைத்துச் சாப்பிட காச நோய், ஆஸ்துமா அகலும்.

-வில்வ இலையுடன் அதன் வேர்ப் பட்டையும் சேர்த்து கஷாயம் போல் செய்து தேன் கலந்து தினசரி ஒரு வேளை பருகி வர சருமநோய்கள் நீங்கும்.

வில்வ இலைகளை வெட்டி வேர், சந்தனம் ஆகியவற்றை ஊற வைத்து தண்ணீருடன் மென்று விழுங்கிவர பித்த எரிச்சல் ஏற்படும் கை, கால், மூக்கு எரிச்சலுடன் கூடிய வலி நீங்கி குணப்படுவர். வில்வ இலைச் சூரணத்தை பாதி அளவு வெந்தயத்துடன் கலந்து இளநீருடன் பருகி வர குடற்புண்,மூலநோய், கண்பார்வை மங்குதல் குணம் ஆகும்.

வில்வ இலைச் சூரணத்துடன் அதிமதுரம், சிற்றரத்தை சூரணங்களைச் சம அளவில் எடுத்து தேனில் குழப்பிச் சாப்பிட பனிக்கால ஆஸ்துமா நோய் வராது தடுக்கலாம்.

பசுமையான வில்வ இலை சுமார் 50, ஒரு டம்ளர் தண்ணீர்விட்டு அரைத்து வடிகட்டிச் சாறு எடுத்து அதை காலை உணவாக நிதானமாக சுவைத்துச் சாப்பிடவேண்டும். பின் 3மணி நேரத்திற்கு நீரைத் தவிர வேறு எதுவும் சாப்பிடக் கூடாது. தண்ணீருக்குப் பதில் இளநீர் சேர்த்துக்கொள்ளலாம்.

நீரிழிவு வியாதியைக் குணப்படுத்தும் மந்த புத்தி, பைத்தியம் போன்ற குறைபாடுகள்அகலும். கிருமி நாசினியாகவும் பயன்படுகிறது.

வில்வ இலைகளைக் கேரளத்தில் உள்ள வேதியல் விஞ்ஞானி ஆய்வு செய்ததில் தினசரி 10முதல் 15வில்வ இலைகளை சாப்பிடுவோருக்கு காலப்போக்கில் நீரிழிவு நோய் கட்டுப்பட்டு, மீண்டும் கணையம் இன்சுலின் சுரக்கச் செய்யும். நீரிழிவு நோயால் வரும் பிற பாதிப்புக்களிலிருந்து காப்பாற்றுகின்றது என்பதனைக் கண்டறிந்துள்ளனர்.

வில்வ இலையை அரைத்துப் பாக்களவு தொடர்ந்து காலையில் மூன்று நாள்கள் சாப்பிட்டு வந்தால் மந்தம் நீங்கி, பசி எடுக்கும். செரிமானம் ஆகும்.

வில்வ மரத்தின் இளந்தளிரை சட்டியில் போட்டு வதக்கி கண்களின் மேல் வைத்துக் கட்டி வந்தால் கண் சம்பந்தமான சகல கோளாறுகளும் நீங்கும்.

### வில்வக்காய்

வில்வக்காய்களைத் தண்ணீர் விட்டு அரைத்து சிறிது மஞ்சள் பொடி சேர்த்து வெண்புள்ளி மீது உலர விடவேண்டும். தொடர்ந்து செய்து வர வெண் புள்ளிகள் மறைந்து பழைய சருமத்தைப் பெற்றிடலாம்.

### வில்வப்பூ

வில்வப்பூவையும் துளசியையும் சம அளவு எடுத்து நசுக்கிச் சாறு எடுத்து தேனில் குழப்பி, காலையிலும் மாலையிலும் ஒரு தேக்கரண்டி வீதம் சாப்பிட கடுமையான காய்ச்சல், குறிப்பாக மலேரியாக் காய்ச்சல் தணியும்.

வில்வப்பூ, வில்வவேர், கோரைக் கிழங்கு, விளாமிச்சை வேர், நில வேம்பு, சுக்கு, சிந்தில் கொடி ஆகியவற்றில் வகைக்கு பத்து கிராம் அளவு சேர்த்து இடித்து, அரை லீட்டர் தண்ணீர் விட்டு எட்டில் ஒரு பங்காக சுண்டக் காய்ச்ச வேணடும் வடிகட்டி காலை, மாலை இரண்டு வேளை சாப்பிட எல்லா விதமான காய்ச்சல்களும் நீங்கிவிடும்.

வில்வப் பூவையும், வேப்பம் பூவையும் கைப்பிடியளவு சுத்தம் செய்து இரண்டையும் சேர்த்து நெய்யில் வதக்கி சிறிது தேன் விட்டு அதை அரைத்துப் பாக்களவு உருண்டைகளாகச் செய்து கொண்டு காலை மாலை சாப்பிட்டு வர மூன்று நாள்களில் உட்காய்ச்சல் நீங்கும்.

### வில்வப்பழம்

வில்வப்பழம் விரும்பிச்சாப்பிடுவதில்லை. பழம் வைத்திய முறைக்குத் தான் பயன்படுகிறது.

வில்வப் பழச் சதையுடன் பனங்கற் கண்டு சேர்த்துக் கலந்து வெறும் வயிற்றில் சாப்பிட்டால் பால்வினை நோய்கள், புண், ரணங்கள் குணமாகும். மலச்சிக்கல் அகலும்.

**வி.ஆனந்தம்**

வில்வப்பழச்சதையில் சுமார் 20கிராம் எடை எடுத்துச் சர்க்கரை சேர்த்து பிசைந்து தினசரி காலையில் வெறும் வயிற்றில் 21தினங்கள் சாப்பிட்டால் பித்த சம்பந்தமான கோளாறுகள் அனைத்தும் அடியோடு ஒழியும். இதேமாதிரியாக 3நாள்கள் சாப்பிட்டால் போதும் வயிற்றுப்புண் குணமாகும்.

வில்வப்பழத்தின் சதையில் சுமா 20கிராம் எடை எடுத்து தேவையான அளவு சர்க்கரையும், சுத்தமான தேன் ஒரு தேக்கரண்டியளவும் சேர்த்துப் பிசைந்து மாலை ஆகாரத்திற்குப் பின் நாற்பது நாள்கள் சாப்பிட்டால் ஷய ரோகத்தைத் தணிக்கும்.

### வில்வ வேர்

வில்வவேர் 500கிராம் எடுத்து நன்கு பஞ்சு போல் இடித்து, 8படி தண்ணீர்விட்டு ஒரு படியாகச் சுண்டக் காய வைத்து காயத்தில் 50 கிராம் சந்தனத்தைச் சேர்த்து அரைத்து காலையில் சாப்பிட்டுவர, மேகம், இருமல், நோய்கள் அகலும்.

வில்வ மர இலை, வேர், பட்டை, பழம் ஆகியவற்றைச் சமூலமாகக் கொண்டு தயாரிக்கப்படும் 'வில்வாதி லேகியம்' அற்புதமான கல்பமாகும். உடலை இறுக வைத்து நோயின்றிக் காக்கும். வில்வாதி லேகியம் நினைவாற்றலை வளர்க்கும். ★

## வில்வம் இலை

> வீட்டுக் கொருவில்வமரந்தனை
> நட்டுவித்து நாளும் வளர்த்து
> கேட்டினைத் தரும் பிணிகளை
> ஓட்டி நல்வாழ்வு பெறலாம்.

# விவசாய நடவடிக்கைகளில் இயந்திர மயமாக்கலின் அவசியம்

விவசாயம் பரம்பரை பரம்பரையாக மனிதகுலத்தின் உணவு, உடை, உறையுள் ஆகிய அத்தியாவசியமான தேவைகளினைப் பூர்த்தி செய்வதற்கான அடிப்படைத் தொழிலாகும். நம் பண்பாட்டில், பண்டைய நாள்களிலிருந்து செய்யப்படும் இத்தொழில் மேலை நாடுகளில் பல வழிகளில் மிக முன்னேற்றமடைந்து நவீன வாழ்க்கைக்கு ஏற்ப இயந்திர மயமாக்கப்பட்டு, தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு ஒரு தொழிற்சாலை போன்ற அமைப்பில் மிக அபிவிருத்தியடைந்து சிறப்பானதாகக் காணப்படுகின்றது.

விவசாயத்தைப் பயனுள்ளதாக்க நீர், சக்திப் பயன்பாடுகளில் புதிய முறைகளைக் கையாளல் வேண்டும். உயர்தர வர்க்கங்களைப் பயிரிடல், திருப்திகரமான பூச்சி, நோய், களை கட்டுப்பாடு, பயிர்ச்செய்கையில் புதிய யுத்திகள், விஞ்ஞான முறைகள் பயன்படுத்தல், திறமையாக தகுதியான பண்ணைமுறை, முகாமைத்துவம், சந்தைக்கு ஏற்பவும், காலநிலைக்கு ஏற்பவும் பயிர்தெரிவு போன்ற பல வழிகளில் உற்பத்தியைப் பெருக்கலாம்.

இவ்வகையில் நம் நாட்டு விவசாயிகள் சிலர் பல இயந்திரங்களை உபயோகித்து பயிர் செய்கிறார்கள். எனினும், தத்தமது வசதிக்கும் தேவைக்கும் ஏற்ப உரிய முறையில் உபயோகித்து பராமரித்து, பழுது பார்த்து, பாதுகாத்து அதிக பயன்களைப் பெறவேண்டும்.

பல்லாயிரம் ஆண்டுகளாக விவசாயத்தின் உயிர் நாடியாக இருந்து நிலத்தைப் பண்படுத்தி, பாரம் இழுத்து, உழைத்து வந்த (எருதுகள், எருமைகள்) போன்ற கால்நடைகளின் தொகை குறைந்து செல்கிறது. இதனால் இவற்றினால் குறைந்தளவு நிலத்தையே உழுது பண்படுத்த முடிகிறது. இவ்வாறு மிருகங்களின் பற்றாக் குறையினால் சில விளைநிலங்கள் பண்படுத்தப்படாமலும், தாமதமாகப் பண்படுத்தப்பட்டும் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.




உடல்வருத்தி உழைக்கும் தொழிலாளர்களும் பண்டைய முறையில் ஏர் பிடித்து உடல் வருத்தி, நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த, சேற்று வயல் ஆடி நாற்று நட்டு விவசாயம் செய்ய இந்நாள் இளைஞர் சமுதாயம் விரும்புவதில்லை. இவ்வாறு கவர்ச்சியற்ற தொழிலாகத் தெரியும் விவசாயத்தில் தரமான இயந்திரங்கள், கருவிகள், உபகரணங்கள் என பலவற்றை விளைத்திறனுடன் உபயோகித்து உற்பத்தி செய்யின் இன்றைய இளைஞர்கள் ஆவலாய் இணைவார்கள். எனவே சமுதாயத்திற்கு ஏற்ப விவசாயம் இயந்திரமயமாக்கல் அவசியமாகிறது.

இதனை மனதில் கொண்டு உற்பத்திப் பொருள்களை இயந்திர உபகரணங்களுடன் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய வேண்டும் உள்நாட்டு சந்தையில் அன்றாடம் தேவைப்படும உணவுப் பொருள்கள், உப உணவுப பொருள்கள் போன்றவற்றின் பற்றாக் குறையை நிவர்த்தி செய்து, வெளிநாட்டு இறக்குமதியைத் தவிர்த்து சிறப்புடைய சிறு இயந்திரங்கள், உபகரணங்கள் போன்றன பயன்படுத்தவும், அறிமுகப்படுத்தப்படவும் வேண்டும்.

தேசிய விருத்தியில் விவசாயத்தை இயந்திரமாக்குதல் ஒரு முக்கிய இடம் பெறுகிறது. இயந்திரமாக்கலில் உழவு இயந்திரம் முன்னுரிமை பெறுகிறது. இறக்குமதி செய்யப்படும் 4சில்லு(20-60 குதிரை வலு), உழவு இயந்திரங்களும் 2சில்லு(5-7 குதிரை வலு) இயந்திரங்களும் நம் நாட்டில் உபயோகிக்கப்படுகின்றன. இவற்றினால் வருடாந்தம் அதிக மணித்தியாலங்களுக்கு வேலை செய்யும் போது இதன் முதலீட்டிற்கு ஏற்ப இலாபம் கிடைக்கும்.

சிறு வலுவுள்ள 2சில்லு உழவு இயந்திரங்கள் கொள்விலை 4சில்லு இயந்திரங்களின் கொள்விலையுடன் ஒப்பிடுகையில் குறைவானது. மேலும் பராமரிப்புச்செலவு, பழுதுபார்க்கும் செலவு, எண்ணெய்ச்செலவு என்பன குறைவாகவும் உள்ளது. ஜப்பான் போன்ற நாட்டின் விவசாயிகளின் சிறப்பான உற்பத்திக்கு இவ்வகையான இயந்திர பாவனை காரணம் என்பது அறிந்ததே.

உழவு இயந்திரங்களைக் கொண்டு மண் பண்படுத்தல் செயற்பாடுகளாக, உழுதல், சேறாடல், பரம்படித்தல், வரம்பும் சாலும் அமைத்தல், பார்கள் அமைத்தல் உரப்பசளை போடல், நிரைகளில் விதைத்தல், வரிசையில் நாட்டிய பயிர்களுக்கு இடையில் புல், பூண்டு அகற்றி வாய்க்கால் அமைத்தல், உழுதல், களை கட்டல், புல் வெட்டல் போன்றனவும் நீர் இறைத்தல், சூடடித்தல், நெல்தூற்றல், பாரம் இழுத்தல், அரிசி ஆலை இயக்குதல் போன்ற செயல்களும் செய்யலாம்.

**ரி.உமையாள்**

இவ்வாறான உழவு இயந்திரங்களுடன் நிலப்பண்படுத்தலில் உபயோகிக்கப்படும் முட்கலப்பை (Tyne-tiling), சுழல் கலப்பை (Rotary tiling), சட்டிக் கலப்பை உழவு (Disc plough) மிகுந்த பயன் உடையன. சுழல் கலப்பை செலவு சிறிது அதிகம் எனினும், சிறந்தமுறையில் பண்படுத்தும், அதிக புல் பூண்டுகளினால் மூடப்பட்ட நிலத்தை வட்டத் தட்டு, கலப்பையினால் (mould

(8ஆம் பக்கம் பார்க்க)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

நவாலி வடக்கு, நாச்சிமார் வீதியில் 7 பரப்புக் காணி, நல்ல தண்ணீர் கிணற்றுடன், வீடு கட்டி குறையிலுள்ள நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.ஜெயசீலன், கற்பகதரு, தாவடிச் சந்தி. காலை 9.30 மணிக்கு முன்னர் சந்திக்கலாம். (17469)

### விற்பனைக்கு

குறுகிய காலம் பாவித்த நல்ல நிலையில் உள்ள ALCA.Tel 311 கையடக்க தொலைபேசி சேவை இணைப்புடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: ரேவதி, 131, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (17557)

### WANTED BRIDE

Christian Tamil Respectable Family Sister seeks for professionally Qualified brother working in Australia a bride aged between 25-30 years of Similiar background. Please give all details in first Letter No.1879, C/o Uthayan. (17469)

## பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்,மே6

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் கடந்த வருடம் ஜூன் மாதம் நடத்தப்பட்ட இலங்கை நூலகப் பொறுப்பாளர் சேவையின் தரம் II, தரம்III பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த வருடம் நடத்தப்பட்ட அரசாங்க மற்றும் மாகாண அரச சேவையில் சிறாப்பர் சேவை வகுப்புII 'அ' அலுவலர்களுக்கான வினைத் திறமைகாண் தடைப்பரீட்சை பெறுபேறுகளும் -அரசாங்க மற்றும் மாகாண அரச சேவையில் எழுதுநர் சேவையின் வகுப்பு II'அ' பிரிவின் அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் பெறுபேறுகளும்-வெளியிடப்பட்டுள்ளன.(எ-185)

## கிராமிய வங்கி திறப்பு விழா

யாழ்ப்பாணம்,மே.6

அச்சுவேலி,பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின், கூட்டுறவுக் கிராமிய வங்கியின் திறப்பு விழா நாளை புதன்கிழமை முற்பகல 11மணிக்கு சங்கத் தலைவர் எஸ்கந்தராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு உதவி ஆணையாளர் க.கணேசமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கூட்டுறவுக் கிராமிய வங்கியைத் திறந்துவைப்பார். (எ-11)

### தவறிவிட்டது

இத்தாவில் பளையைச் சேர்ந்த வெற்றிவேலு கோகிலவர்தனியின் அ.அட்டையும் (808212854V), வெற்றிவேலு அன்னலட்சுமியின் அடஅட்டையும் (78701824 4V) நேற்று 05.05.2003 காலை யாழ்.கச்சேரியடிக்கும் சின்னக்கடை பிரதான வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

இல.97, கண்டி வீதி,
சுண்டுக்குளி.
(17573) T.P: 071 -794862

### இலவச கருத்தரங்கு

A/L பொது வினா-2003
by: T.திருமுருகன்
இன்று
நியூட்டன்
(யாழ்நகர்)
காலை 9மணி
திகழ் கல்வி நிறுவனம்
(இணுவில்)
மாலை 3மணி
வழிகாட்டி நூல் இங்கு கிடைக்கும்.
(17565)

### மணமகள் தேவை

1972, கார்த்திகை 1இல் செவ்வாய் கிரகபாவம் 52 BENG. M.Sc. (Advanced Manufacturing Systems) - University of London University kingston Work - Delarue PLO (Lanka) Security & currency Printers Joint Venture Central Bank, Salary SLR 80,000/- இற்கு மேல் பெறும் உயர் உத்தியோக மணமகனுக்கு அழகான மணப்பெண் டாக்டர், கணக்காளர் தரத்தில் தேவை. தொடர்பு:

பொ.பாலச்சந்திரன்
(இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்)
202 மானிப்பாய் வீதி, ஓட்டுமடம். யாழ்ப்பாணம்.
தரகுப் பணம் எதுவும் இல்லை.
(17535)

## இடமாற்றம் செய்யப்பட்டும் இடமாறாத கல்முனை கல்வி வலய எழுதுநர்கள்

சாய்ந்தமருது,மே6

வடக்கு - கிழக்கு மாகாண பொது நிருவாக அமைச்சினால் வருடாந்த இடமாற்றத் திட்டத்தின்கீழ் ஏப்ரல் மாதம்முதல் கல்முனை வலயக் கல்வி அலுவலகத்திருந்து இடமாற்றம் செய்யப்பட்ட எழுதுவினைஞர்கள் எவரும் இடமாற்றம் பெற்று புதிய அலுவலகங்களுக்கு கடமைக்காகச் செல்லவில்லை.

சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களால் மாகாண பொது நிருவாக அமைச்சின் செயலாளருக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் 5 வருடங்கள்முதல் 20 வருடங்கள்வரை தொடர்ச்சியாகக் கடமையாற்றிய பொது எழுதுவினைஞர் சேவையைச் சேர்ந்த 10பேர் கல்முனைப் பிரதேசத்திலுள்ள வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்

இவ்வாறு இடமாற்ற உத்தரவு பெற்றோரில் வேறு திணைக்களங்களைச் சேர்ந்த சிலர் புதிய இடங்களில் கடமையேற்றுள்ளனர்.

ஆனால், கல்முனை வலயக்கல்வி அலுவலகத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட ஒருவரும் இடமாற்ற உத்தரவுப்படி செயற்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட எழுதுவினைஞர்களில் பலர் வடக்கு - கிழக்கு மாகாண பொது நிருவாக அமைச்சின் மேன்முறையீட்டுச் சபைக்கு முறையீடு செய்த போதும் அவர்களின் முறையீடுகளை அமைச்சின் செயலாளர் நிராகரித்துள்ளார். (எ)

## தனிநாயகம் அடிகள் நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம்,மே6

கொழும்புத்துறை தனிநாயகம் தமிழ் மன்றம் நடத்தும் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நினைவுப் பேருரைத் தொடரில் 'தமிழ்த்திரையுலகு: பிரதான போக்குகளும் மாற்று முயற்சிகளும்' என்னும் விடயத்தில் எழுத்தாளரும் விமர்சகருமான அ.யேசுராசா உரை நிகழ்த்தவுள்ளார்.

இந்த நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 3.45மணிக்கு புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (எ-6)

## விவசாய நடவடிக்கைகளில்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

board plough) உழுது பண்படுத்தலாம். உழுத நிலத்தில் சுழல் கலப்பையால் உழுதல் சிறப்பானது.

மேலும் விதையிடும் கருவி (seeder), சூடடித்து தூற்றிக் கொள்ளும் கருவி (Thresher) போன்றனவும் உழவு இயந்திரங்களுடன் பயன்படுத்தப்படும். உழவு இயந்திரம் கமத்தின அளவு, தரையின் தன்மை, கிடைக்கக்கூடிய வசதி அல்லது கடன், சாகுபடி செய்யும் பயிர், போகமல்லாத காலத்தில் உழைக்கக்கூடிய வருமானம் போன்றவற்றை மனதில் கொண்டு வாங்கப்படல் வேண்டும்.

இதுபோன்று பழைய கால துலா இறைப்பு முறை கைவிடப்பட்டு நீர் இறைக்கும் இயந்திரங்கள் எண்ணெய் மூலம் இயங்குபவை, மின்மூலம் இயங்குபவை என மாற்றப்பட்டுள்ளன. தெளிகருவிகள், சிறு விவசாய உபகரணங்கள் போன்றனவும் செவ்வனே உபயோகித்துப் பராமரித்து முறையாக பழுது பார்த்து பயன்படுத்தல் வேண்டும்.

நுகர்ச்சித்தேவை, சந்தை வசதி, உற்பத்திச் செலவு ஆகியவற்றினைக் கொண்டு புதிய கருத்துக்கள், பயிரினங்கள் செய்முறைகள், அறிமுகப்படுத்தப்பட்டு இறக்குமதிக் கட்டுப்பாட்டுடன் விரைவாகவும், அதிகமாகவும் இலாபம் தரும் உத்திகளை கையாண்டு சிறந்த பயன் பெற்று உற்பத்தியைப் பெருக்கி தன்னிறைவு அடைவதுடன் ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையை அடைய வேண்டும். நம் எதிர்காலம் நம்பிக்கையுள்ளதாகவும் சுபீட்சமானதாகவும் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ◆

### டி.ஏ.எம். பட்டதாரிகள் வைத்திய சங்க வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

D.A.M. பட்டதாரிகள் வைத்திய சங்க வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் (11.05.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு இலங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது. சகல D.A.M. பட்டதாரி வைத்தியர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம். புதிய நிர்வாக உத்தியோகத்தர் தெரிவுடன் சித்த வைத்தியத்துறை அபிவிருத்தி பற்றியும் இலங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி வளர்ச்சி பற்றியும் ஆராயப்படவுள்ளது.

S. பரமசிவம்பிள்ளை J.P. தலைவர். (17577) S.T. சிங்கஅரியரட்ணம் செயலாளர்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 19 - 08 - 1936



மறைவு 06 - 04 - 2003

### அமரர் துரையப்பா துரைச்சாமி

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 04.05.2003 ஞாயிற்றுக்கிழமை சாட்டி தீர்த்தக்கரையில் நடைபெற்றன. அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் என்பன இன்று (06.05.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் இந்நிகழ்வில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம்.

அத்தோடு அன்னாரது இறுதிக்கிரியைகளிலும் சடங்குகளிலும் பங்குபற்றி மற்றும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை. (17575) மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## பொது நிகழ்வுகளில்...



வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற யோகாசனப் பயிற்சியின் இறுதி நாளன்று பயிற்சி அளித்த சங்கர்ஜி அவர்களுக்கு உதவிப்பிரதேச செயலர் மு.சிவராசா பொன்னாடை போர்த்தி மாலை அணிவிப்பதையும் அருகில் கிராம அபிவிருத்தி அலுவலர் தா.தியாகமூர்த்தி நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: வலிகாமம் மேற்கு செய்தியாளர்)




சாவற்கட்டு தாரகா விதவைகளுக்கான மலர்வு மையம் அதன் பயனாளிகளுக்கு மலசலகூடம் அமைத்துக் கொடுக்கவுள்ளது.

இதுதொடர்பாக நடைபெற்ற கருத்தரங்கில் மனித முன்னேற்ற நடு நிலையத்தின் வெளிநாட்டுப் பிரதிநிதி பீற்றர் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் தாரகா மலர்வு மைய தலைவி திருமதி உதயராஜ் சைலா, கியுடெக் நிறுவன இயக்குநர் வண.எஸ்.ஜெ. ஜெயக்குமார் ஆகியோர் காணப்படுகின்றனர். (எ-185)



வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமுர்த்தி வங்கி திறப்பு விழா மானிப்பாய் சங்கரப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள கட்டடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலர் க.செல்வராசா மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் என்.சிவபாதசுந்தரம், இலங்கை வங்கி யாழ்.பிரதேச முகாமையாளர் செ.நடராசலிங்கம், மானிப்பாய் தெற்கு கிராம உத்தியோகத்தர் கி.இராசயோகன், சமுர்த்தி முகாமையாளர் க.சுசீந்திரராசா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: நவாலி செய்தியாளர்)



யாழ்.மாவட்ட மக்கள் நலன்புரிச் சங்கத்தின் 13ஆவது தேசிய பாசறையின் இறுதிநாள் நிகழ்வில், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மாணவர்களின் பாண்ட் வாத்திய இசை அணிவகுப்பு மரியாதையுடன் அமைச்சர் தி.மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம், யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் ஆகியோர் அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம். (எ-185-10)

# ஈழமாணவி மயூரணி கொலைச் சூத்திரதாரி: இலங்கையில் தொடங்கிய 'க்ரைம்' வரலாறு

மதுரையில் மாணவி மயூரணி படுகொலை சம்பவத்தில் பிரதான சந் தேக நபராகக் கைது செய்யப்பட் டுள்ள பாலபிரசன்னாவின் 'கன்னி' கொலை முயற்சி அரங்கேறியது. இலங் கையில் உள்ள அவனது சொந்த ஊரான திருகோணமலையில்தான். அங்கு அவன் வெறியோடு காதலித்த



மயூரணி

பெண் லக்ஷினி, அவனது காதலை ஏற்கமறுக்கவே வீட்டுக்குள் புகுந்து லக்ஷினியின் கைகளைச் சீவி எறிந்து விட்டு 'எஸ்கேப்' ஆகிவிட்டான் பால பிரசன்னா. இன்றுவரை பாலபிரசன்னா அந்தச் சம்பவத்தில் இலங்கைப் பொலீ ஸாரால் தேடப்படும் குற்றவாளியாகவே இருக்கிறான்.

இந்த விவகாரம் குறித்து விசாரிக்க புகுந்தால் பாலபிரசன்னாவின் மிரட்டலான இன்னொருபக்கம் திகிலூட்டுகிறது.

திருகோணமலையில் கேமச்சந் திரா என்பவர் பிரபல டாக்டர். இவரது மகள்தான் லக்ஷினி. படிப்பில் படுசுட்டி அதே பகுதியைச் சேர்ந்தவன் என்ற வகையில் பாலபிரசன்னா லக்ஷி னிக்கு அறிமுகமாகி இருக்கிறான். சிறு வயதிலிருந்தே லக்ஷினியுடன் நாகரி கமாக நட்புப்பாராட்டிவந்த பாலபிர சன்னா காலப்போக்கில் அதைக் காத லாக 'டெவலப்' பண்ண ஆரம்பித்தி ருக்கின்றான்.

பாலபிரசன்னாவின் நடவடிக்கை களை மோப்பம் பிடித்துவிட்ட லக் ஷினியின் தந்தை, அவனை அழைத்து கண்டித்திருக்கிறார். தனது செல்வாக் கைப் பயன்படுத்தி 'பில்லைக் குறூப்' எனப்படும் ரோந்து அதிரடிப்படை, பொலீஸ், ஈ.பி.டி.பி. இயக்கத் தோழர் கள் என்று பலதரப்பு வாயிலாகவும் பாலபிரசன்னாவுக்கு எச்சரிக்கைவிடுத் திருக்கிறார். அப்படியும் பாலபிரசன்னா தனது நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ளாமல் போக ஒரு குறூப் மூலம் அவனை நையப்புடைத்ததா கவும் தகவல். அத்தோடு, அவசர அவ சரமாக தனது மகளுக்கு மாப்பிள்ளை பார்த்து திருமணத்துக்கு திகதியும் குறித்துவிட்டார் அவர்.

இருந்தாலும் விடவில்லை பால பிரசன்னா. தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு லக்ஷினியைத் துரத் தித் துரத்தித் தொல்லைதந்தான். "என்னை ஏன் இப்படி வதைக்கிறாய்?" என்று லக்ஷினி ஒருநாள் வாய்க்கு வந்தபடி பாலபிரசன்னாவை திட்டித் தீர்த்துவிட்டாள்.

திருமணத் திகதி நெருங்கிக்கொண் டிருக்க லக்ஷினியை நிரந்தரமாக இழக்கப்போகிறோம் என்று நினைப் பில் பாலபிரசன்னாவின் மனம் மறுபுறம் தணலாக எரியத் தொடங்கியது. கோபத் தின் உச்சம் கொலைவெறியாக வெடித்தது.

திருமணத்துக்கு இன்னும் ஒருவாரம் தான்... 2001 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 29ஆம் திகதி அதிகாலை 5மணிக்கு... வெட்டரிவாளுடன் லக்ஷினியின் வடு நோக்கிக் கிளம்பினான் பாலபிரசன்னா. லக்ஷினி வீட்டின் பின்பக்கச் சுவரே றிக் குதித்து மறைவான ஓர் இடத்தில் பதுங்கினான். வீட்டுத்தோட்டத்தில் உள்ள பூங்கன்றுகளுக்கு தினமும் காலையில் லக்ஷினி நீர்பாய்ச்சுவது வழக்கம். தருணத்தைப் பார்த்துக் காத்திருந்த அவனுக்கு ஏமாற்றம்தான். அன்றையதினம் பூங்கன்றுகளுக்கு தணணீர்பாய்ச்ச வந்தது லக்ஷினியின் வருங்கால மாமியார். கையில் வெட்டரி வாளோடு பதுங்கியிருந்த பாலபிரசன் னாவைக் கண்டு பதறிப்போன அந்த அம்மையார் பயத்தில் கத்தியிருக்கி றார். வீட்டுக்குள் இருந்த லக்ஷினி இந்தச் சத்தங்கேட்டு வெளியே ஓடிவர பாய்ந்துசென்று லக்ஷினியின் தோள் மூட்டின்மேல் ஓங்கிவெட்டினான் பால பிரசன்னா.

சற்றும் எதிர்பாராத இந்தத் தாக்கு தலால் லக்ஷினி கீழே விழுந்தாள். உடனே லக்ஷினியின் மற்றொரு கையின் மணிக்கட்டிலும் ஒரு கொத் துக் கொத்தினான். அது துண்டிக் கப்பட்டு தொங்கியது. இதற்கிடையில் குறுக்கே பாய்ந்து மருமகளைக் காப பாற்ற முயன்ற மாமியாருக்கு விழுந்த ஒரு வெட்டில் அவரது மூன்று விரல் களும் துண்டிக்கப்பட்டன.

பயங்கரத்தை அரங்கேற்றிமுடித்த பாலபிரசன்னா அங்கிருந்து பொழுது புலர்வதற்குள் 'எஸ்கேப்' ஆகிவிட்டான்.

சம்பவத்தைக் கேள்விப்பட்டு அங்கு விரைந்து வந்த ஊர்மக்களாலோ, பொலீஸாராலோ அவனைப் பிடிக்க முடியவில்லை.

சீரியஸான கட்டத்திலிருந்து லக்ஷினியைக் காப்பாற்றமுடியாது என்று கையைவிரித்தனர் திருகோண மலை டாக்டர்கள். தந்தையும் பிரபல டாக்டர்தான். ஆனாலும், திருகோண மலை போன்ற நகர்ப்புற வைத்திய சாலை வசதிகளைக்கொண்டு மகளைக் காப்பாற்ற முடியாது என்பது அவருக் குப் புரிந்தது. தலைநகர் கொழும்பி லுள்ள வைத்தியசாலைக்குத்தான் கொண்டுபோக வேண்டுமென்று திரு கோணமலை டாக்டர்களும் கூறினார்கள்.

தனது செல்வாக்கைப் பயன்படுத்தி உடனடியாகத் திருகோணமலைக் கடற்படைத் தளத்துடன் தொடர்பு கொண்டு அவர்களின் உதவியுடன் விசேட ஹெலிகொப்டர் ஒன்றின்மூலம் மகள் லக்ஷினியை கொழும்புக்குக் கொண்டுசென்றார் டாக்டர் ஹேமச் சந்திரா. அங்கு தீவிர சிகிச்சைப்பிரி வில் வைத்து லக்ஷினியின் உயி ரைக் காப்பாற்றியதுடன், கைகளைப் பொருத்துவதற்கும் முயற்சிசெய்தார்



பாலபிரசன்னா

கள் டாக்டர்கள். அவர்களின் முயற்சி பலித்தது. வெட்டப்பட்ட கை பொருத் தப்பட்டதை உலக அதிசயமாகக் கதைத்த ஊர்மக்கள், கையை வெட் டிய பாலபிரசன்னாவை மறந்தே போனார்கள்.

திருகோணமலையில் உவர்மலை என்ற கிராமத்தில் பாலபிரசன்னா ஒளிந்திருக்கிறான் என்று ஒருநாள் காலை பொலீஸாருக்குச் செய்தி கிடைத்து அங்கு விரைந்த தனிப்படை ஊரையே 'ரவுண்டப்' பண்ணித் தேடி யது. ஆனால், விசயத்தை முன்னரே தெரிந்துகொண்டு உசாரான பாலபிர சன்னா அங்கிருந்து புலிகள் கட்டுப்பாட டினுள் உள்ள மூதூர்க் கிராமத்துக்குள் சென்றுவிட்டான். பொலீஸாரால் ஒன்றும் செய்யமுடியாமல்போகவே, அந்த வழக்கு விசாரணையே கிணற்றில் போன கல்லானது.

பின்னர் பிரபல நகை வியாபாரி யான தனது தந்தை சிவகுமாரின் செல வாக்கால் ஒரு மாதிரி தப்பி இந்தியா வுக்கு வந்துசேர்ந்தான்.

இப்போது மதுரையில் மாணவி மயூரணியைக் கொலைசெய்துவிட்டு வசமாக அகப்பட்டுவிட்டான்.

திருகோணமலையிலுள்ள மயூரணி யின் உறவினர்களைச் சந்தித்தபோது-

'மயூரணி' ஆரம்பக் கல்விவரை யாழ்ப்பாணத்திலும் உயர்கல்வியை திருகோணமலையிலும் முடித்தாள். கொம்பியூட்டர் சயன்ஸில், டிகிரி, பட்டம் வாங்கவேண்டும் என்ற இலட்சியத்தில் தான் இங்கிருந்து இந்தியா சென்றாள். அவளுக்கு காலனும் இங்கிருந்தே பின் தொடர்ந்து சென்றான் என்பதை நினைக்கும்போது எங்கள் நெஞ்சு வெடித்துவிடும்போல் இருக்கிறது.

தமிழகப் பொலீஸ் தற்போது பிடித் துவைத்திருக்கும் பாலபிரசன்னாவை இங்கேநடந்த கைவெட்டுக கேசிலேயே பிடித்து உள்ளே தள்ளியிருந்தால் இன்று அநியாயமாக ஓர் உயிர் போயிருக்குமா? 'பவா' (மயூரணியின் வீட்டுப்பெயர்) மிகவும் மென்மையான வள்... இந்தக் கோரத்தால என்ன வேதனைப்பட்டிருப்பாள். என்று கூறு கிறார்கள் கண்களில் நீர்மல்க. ★


(நன்றி: ஜுனியர் விகடன்)

## அவிழாத மர்ம முடிச்சு...!

இலங்கை மாணவி மயூரணி கொலையில் நிஜ காரணத்தைத் தேடி நாலாபக்கமும் ஓடிக்கொண்டேயி ருக்கிறது பொலீஸ். இருந்தாலும் மர்ம முடிச்சுகள் இன்னமும் அவிழ்ந்தபா டில்லை.

'பாலபிரசன்னாதான் மயூரணியை கொலைசெய்திருக்கிறான்' என்று பொலீஸ் தரப்பில் சொல்லப்பட்டாலும்... மயூரணியின் தந்தை தியாகராஜா இதை ஏற்கவில்லை.

"தனியோர் ஆளாக பாலபிரசன்னா மட்டுமே இந்தக் காரியத்தை செய்தி ருக்க முடியாது. நிச்சயமாக அவனுக்கு துணையாக இன்னும் சிலர் இருந்தி ருக்கிறார்கள். சோலைமலைத் தேவ ருக்கு விசுவாசமான சில பொலீஸ் அதிகாரிகள் திட்டமிட்டே அந்தக் கொலையாளிகளைத் தப்பவைத்து விட்டார்கள் என்று நான் சந்தேகிக்கி



மயூரணியின் தந்தை
தியாகராஜா

றேன்' என்கிறார் தியாகராஜா.

ஒருமாதத்துக்கு முன்பு தனது தந் தையிடம் போனில் பேசிய மயூரணி சோலைமலை தேவர் குடும்பம் பற்றி ரொம்பவே வருத்தப்பட்டாராம் "சோலை மலைத் தேவர் வீட்டு பொம்பளைங் களுக்கு மரியாதையே தெரியலப்பா., கரடுமுரடா இருக்காங்க" என்று மயூ ரணி அப்போது சொன்னதாக பொலீஸ் கமிஷனரிடம் தெரிவித்திருக்கிறார் தியாகராஜா.

இதுபற்றி நம்மிடம் பேசிய தியா கராஜா "சோலைமலைத் தேவரின் பிள்ளைகளோ, மனைவி ராக்கம்மாளோ மயூரணியிடம் அவமரியாதையாக நடந் திருப்பார்களோ என்று எனக்குச் சந் தேகம். அந்தச் சம்பவமே கூட கொலையில்போய் முடிந்திருக்கலாம். கொலை எதற்காக, எப்படி நடந்திருந் தாலும் அது சோலைமலைத் தேவருக கும் அவர் வீட்டுப் பெண்களுக்கும் தெரிந்தேதான் நடந்திருக்கிறது. கொலைக்கு உடந்தையாகவும் இவர் கள இருந்திருக்கலாம். அப்படி இருக் கும்போது அந்தப் பெண்களை விசா ரணை வலயத்துக்குள் பொலீஸ் ஏன் கொண்டுவரவில்லை. பொலீஸ் கமிஷனரிடம் இந்தக் கேள்வியையும நான் எழுப்பியிருக்கிறேன் என்றார்.


இதற்கிடையே, மயூரணி கொலை விவகாரத்தில் இருந்து சோலைமலைத் தேவரைக் காப்பாற்ற சில பொலீஸ் அதிகாரிகள் முயற்சித்ததாகவும் ஆனால் மேலிடத்திலிருந்து வந்த ஒரு பிரசர் தான் அவரை விசாரணை வலயத்துக் குள் இழுத்துவிட்டதாகவும் மதுரையில் பரபரப்பான பேச்சு.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் வளர்ப்புமகன் திருமணத்தின்போது சோலைமலைத் தேவருக்கு சொந்த மான சென்னை நகைக்கடையில் சுமார் 200 சவரன் வரைக்கும் நகை வாங்கப்பட்டிருக்கின்றது. இதற்கான பணத்தை வசூலிப்பதில் பிரச்சினை ஏற்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. இப் போது இந்தப் பழசையெல்லாம் நினைவுபடுத்தி முடிச்சுப் போடுகி றார்கள் சோலைமலை வட்டாரத்தில். கலைஞரோடு சோலைமலைத் தேவ ருக்கு நெருக்கம் அதிகம் திமுகவுக்கு மட்டும் தேர்தல் சமயங்களில் இலங் கையில் நிதி வசூல்பண்ணிக் கொடுக் கின்றார் என்று சில 'ப்ளாக்ஷ் பேக' விசயங்களும் இப்போது உலாவரு கின்றன.

இன்னொருபக்கம் மதுரையைச் சேர்ந்த மயூரணியின மாமா ஒருவரை அடித்து லாடம்கட்டி அவரைக் கொலையாளியாக்கும் முயற்சியும் நடந்திருக்கிறது. விசயமறிந்து பதறிப் போன தியாகராஜா இவரைக் குற்ற வாளியாக்கினால் இந்தஇடத்திலேயே என்னைநான் மாய்த்துக்கொள்வேன் என்று குமுறிக் கொந்தளிக்க அதன் பிறகு அந்த நபரை விடுவித்திருக்கின் றது பொலீஸ்.

இந்தக்கொலை விவகாரத்தை இன னொரு கோணத்திலும் ஆராய்கிறது பொலீஸ்.

இலங்கை அரசில் தணிக்கைத் துறையில் பணிபுரிகிறார் மயூரணியின் தந்தை தியாகராஜா. தணிக்கைத்துறை சார்ந்த முறைகேடுகளை விசாரித்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரி அவர். நேர்மையாக இருக்கவேண்டும என்பதில் உறுதியாகவிருக்கும் தியாக ராஜாவின் அதிரடி நடவடிக்கைகள் அந்த நாட்டிலுள்ள யாரையாவது ஆழமாகப் பாதித்திருக்கலாம். இனி மேலும் தியாகராஜா தங்களது விஷ யத்தில் தலையிடக்கூடாது என்பதற் காக அவர்கள் கூட யாராவது மயூர ணியைக் கொலைசெய்ய ஏற்பாடு செய்திருக்கலாம் அதற்கு இலங்கை மாணவனான பாலபிரசன்னாவை ஒரு கருவியாகப் பயன்படுத்தியிருக்கலாம் என்பதே அந்தக்கோணம்.



சோலைமலைத் தேவர்

இதற்கிடையில், கொலை நடந்த தாகச் சொல்லப்படுவதற்கு முதல்நாள் இலங்கை செல்வதற்காக விமானடிக்கட் புக்பண்ணுவதற்காக பாலபிரசன் னாவை திருச்சிக்கு அனுப்பியிருக் கிறார் சோலைமலைத்தேவர். ஆனால், அந்தக் குறிப்பிட்ட திகதியில் டிக்கட் இல்லாததால் வெறுங்கையோடு திரும்பியிருக்கிறார் பாலபிரசன்னா. மயூரணி கொலையை வெற்றிகரமாக முடித்துவிட்டு பொலீஸ் பிடியிலிருந்து தப்புவதற்காக சோலைமலைத் தேவர் இலங்கைக்குப் பறந்துபோக திட்டம் போட்டிருக்கலாம் என்பது விசா ரணை அதிகாரிகள் கிளப்பும் இன் னொரு சந்தேகம். ★

---

# சாவல்கட்டில் 250 குடும்பங்கள் மலசலகூட வசதிபெறும்

## யாழ். அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம்,மே6

சாவல்கட்டுப் பகுதியில் வசிக் கும் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட 250 குடும்பங்களுக்கு மலசலகூட வசதி செய்து கொடுக்கப்படவுள் ளது.

இதன் முன்னேற்பாட்டு நடவடிக் கையாக மலசலகூட வசதியற்ற குடும்பங்களின் விவரங்கள் மற்றும் வாழ்வாதார நிலைமைகளை உறுதிப் படுத்தித் தருமாறு யாழ்.அரசஅதிபர் சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலரைக் கேட்டுள்ளார்.

மலசலகூடம் அமைப்பதற்கெனத் தெரிவுசெய்யப்படும் குடும்பங்களுக்கு மலசலகூடம் கட்டுவதற்கான அனைத் துப் பொருள்களும், உபகரணங் களும் வழங்கப்படவுள்ளன என்றும் - கூறப்பட்டது.

இதற்கிடையில், மேற்படி அறிவு றுத்தல்களின் பிரகாரம் பாதுச்சுகா தாரப் பரிசோதகர்கள் மலசலகூட வசதி தேவைப்படுவோரின் விவரங் களை விரைவில் திரட்டி பிரதேச செய லகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும் - உதவிப் பிரதேச செயலர் அறிவுறுத்தியுள்ளார்.

(எ-185)

## இடிதாங்கிகளை திருத்துமாறு கோரிக்கை

குருநகர்,மே6

குருநகர் தண்ணீர் தாங்கி மற்றும யாழ். பிரதான வீதி தண்ணீர் தாங்கி ஆகியவைகளில் உள்ள இடிதாங்கி கருவிகளை புனரைமைக்குமாறு குரு நகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பு யாழ்.அரச அதிபரிடம் மகஜர் மூலம் கோரியுள்ளது.

குடாக்கடற் பகுதியில் முன்னர் அமைந்திருந்து யுத்தம் காரணமாக சேதமடைந்து காணப்படும் முகத்து வார வெளிச்சக்கட்டையை மீண்டும் அந்த இடத்தில் நிறுவி அதில் ஏற்க னவே இருந்தது போன்று இடி தாங் கிக் கருவியையும் பொருத்துமாறும் அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(ம-51)

# சாவகச்சேரி சந்தை வீதி போக்குவரத்துக்கு திறப்பு

தென்மராட்சி,மே6

கடந்த மூன்று வருடங்களாக பொதுமக்களின் பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த சாவகச்சேரி பொதுச்சந்தையின் தெற்குப்புற வீதி கடந்த முதலாம் திகதிமுதல் திறந்து விடப்பட்டுள்ளது.

இவவீதி இணையும் தனங்களப்பு வீதியில் வீதித்தடை போடப்பட்டிருந் ததால், பொதுச்சந்தையின் தெற்குப் புறவீதி தடைசெய்யப்பட்டிருந்தது.

தனங்களப்பு வீதியில் உள்ள புகையிரதக் கடவைக்கு அருகில் வீதித் தடைக் கம்பம் மாற்றப்பட்ட தைபடுத்து, இவ்வீதி பொதுமக்கள் பாவனைக்கு திறந்துவிடப்பட்டுள் ளது.

சாவகச்சேரியில் இருந்து தனங் களப்புக்குச் செல்லும் வீதி தடைசெய் யபபட்டுள்ளதால் இவ்வீதியில் உள்ள கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு செல் வோர் அனுமதி பெற்றுச் செல்வது குறிப்பிடத்தக்கது.

(எ-117)

## அன்னை ஈஸ்வரம்மா நினைவு தினம் அனுஷ்டிப்பு

கோப்பாய்,மே6

கோப்பாய் ஸ்ரீ சத்தியசாயி நிலை யத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை அன்னை ஈஸ்வரம்மா நினைவுநாள் விழா பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

(எ-72)



உ

அரியாலை காந்தி சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினரால் அமரர் எஸ்.ஆர்.இரத்தினசிங்கம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான வடமாகாண ரீதியிலான

# மென்பந்து துடுப்பாட்டப் போட்டி

போட்டிக்கான விவரங்கள்:

- போட்டி 6 பேர் 6 ஓவர்களைக் கொண்டது.
- விண்ணப்ப முடிவு திகதி: 10.05.2003 சனிக்கிழமை
- விண்ணப்பப்படிவம் கிடைக்கும் இடம்:

காந்தி சனசமூக வி.கழகம், அரியாலை.

*அரியாலை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.* (17586)

- காந்தி சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம்.

# ஒப்பந்தகாரர்கள் கவனத்திற்கு

1. தமிழர் புனர்வாழ்வுக் கழகம், பாரிய மீள்குடியேற்றத் திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்தவுள்ளது. முதற் கட்டமாக 08 மாவட்டங்களிலும் 08 கிராமங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட "சிரான்" இன் அனுமதி கிடைத்துள்ளது.

| இல. | மாவட்டம் | கிராமம் |
|---|---|---|
| 01. | கிளிநொச்சி | தம்பகாமம் |
| 02. | முல்லைத்தீவு | உப்புமாவெளி |
| 03. | வவுனியா | கல்மடு |
| 04. | மன்னார் | சொர்ணபுரி |
| 05. | யாழ்ப்பாணம் | ஆழியவளை |
| 06. | திருகோணமலை | மாங்காயூற்று |
| 07. | மட்டக்களப்பு | புல்லுமலை |
| 08. | அம்பாறை | தங்கவேலாயுதபுரம் |

2. இத்திட்டத்தில் பின்வருவன அடங்கும்
   - ☆ புதிய முன்பள்ளிகள், முன்பள்ளித் திருத்தம்
   - ☆ ஆரம்ப சுகாதார நிலையங்கள்
   - ☆ வீதி புனரமைப்பு
   - ☆ விளையாட்டு மைதானம்
   - ☆ பொதுக்கிணறு திருத்தம், புதியது.
   - ☆ புதிய மலசலகூடங்கள்
   - ☆ சிறுவர் பூங்கா
   - ☆ குளங்கள்
   - ☆ பொது மண்டபம்
   - ☆ பாடசாலைத் திருத்தம்
3. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் தங்கள் தொடர்பினை மேற்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

3.1) இக்கடிதத்தில் பின்வரும் விடயங்கள் இருத்தல் அவசியமாகும்.

1. நிறுவனத்தின் பெயர்:
2. நிறுவன பதிவு இல.:
3. நிறுவன சொந்தக்காரரின் பெயர்:
   விலாசம்:
4. தொடர்பாளரின் பெயர்:
5. தொடர்பாடலுக்கான இலக்கங்கள்
6. எவ்வளவு கால அனுபவம்
7. எத்துறையில் நிபுணத்துவம்:
8. முன்னர் செய்த சாதனைகள்:
9. நிறுவன ஆளணி எண்ணிக்கை:
10. தகுதியை வெளிப்படுத்தும் வேறு விவரங்கள்:

4. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடனான தொடர்புகளுக்கு:

☆ விலாசம் : த.பு.கழகம், நடுவப் பணியகம் கண்டி வீதி, கிளிநொச்சி.
☆ தொலைபேசி : 021 222 3947
☆ தொலை நகல் : 021 222 3947
☆ ஈமெயில் : tro kili@dialogal.net (சி-27727)


The Barbara Mulvaney Computer Training Centre

A/L மாணவர்களுக்கான விசேட கணனி வகுப்புக்கள்

Diploma Courses

Diploma in Microsoft Office (4 months)
Diploma in Desktop Publishing (4 months)
Diploma in Information Technology (4months)
Diploma in Software Application (4months)
Diploma in Photo Graphic (3 months)
Diploma in Programming (4 months)
Diploma in Kids Course (3 months)
Diploma in Studio Designing (3 months)

Certificate Courses

Auto CAD 2000
Corel DRAW 9
Adobe Photo shop
Microsoft Excel
Adobe Page Maker 6.5
Microsoft Visual Basic 6
Microsoft Word
Microsoft Access

Diploma in Ms Office கற்கும் மாணவர்கள் Type Setting பயிற்சி நெறியினை இலவசமாக மேற்கொள்ளலாம்.

வகுப்புக்கள் யாவும் 12-05-03 அன்று ஆரம்பமாக இருப்பதால் அதற்கு முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

123, Temple Road, Jaffna T.P.No - 222 5971


## இந்து மாநாட்டை முன்னிட்டு இங்கு நடைபெறும் நிகழ்வுகள்

இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு குடாநாட்டில் உள்ள ஆலயங்கள், இந்துசமய நிறுவனங்கள், அரச அலுவலகங்கள் ஆகியவற்றில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் பற்றிய விவரம் வருமாறு:-

அராலி மத்தி ஊரெத்தி மகாமாயி மாரிஅம்மன் ஆலயத்தில் இன்று காலை 9 மணிக்கு திருவீதியுலா நிகழ்வு இடம்பெறும்.

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,மே6

அராலி, குழுக்கன் குளம் நாச்சிமார் ஆலயத்தில் இன்று காலை 10 மணி முதல் நண்பகல் 12மணி வரை விசேட பூசைகள், ஆராதனைகள் நடைபெற்று அன்னதான நிகழ்வு இடம் பெறும்.

☆ ☆ ☆

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்தில் கடந்த 2ஆம் திகதி தொடக்கம் விசேட அபிஷேக ஆராதனைகள், புராணபடனம், திருமுறைப்பாராயணம், நற்சிந்தனை என்பன இடம்பெற்று வருகின்றன.

☆ ☆ ☆

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் இந்து மாநாட்டுக்காலங்களில் விசேட பூசை, பிரார்த்தனை, சொற்பொழிவு, பிரசாதம் வழங்கல் என்பன தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. நாளை புதன்கிழமை அறநெறிப் பாடசாலை அதிபர் கா.கணேசதாசனின் சொற்பொழிவு இடம் பெறும்.

☆ ☆ ☆

காரைநகர் கிழவன்காடு ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் நாளை புதன் கிழமை மாலை 5மணிக்கு பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில் சமயச் சொற்பொழிவு இடம்பெறும். இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள சொற்பொழிவாளர்கள் இதில் பங்குபற்றுவர்.

☆ ☆ ☆

யாழ்.மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழு இந்து மாநாட்டை முன்னிட்டு சிறப்பு மலர் ஒன்றை வெளியிடவுள்ளது. இந்து சமயத் தலைவர்கள் மற்றும் துறை சார்ந்த அறிஞர்களின் ஆக்கங்கள் இந்த நூலில் இடம்பெறவுள்ளன.

☆ ☆ ☆

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகம் பாடசாலை மாணவர்களுக்கிடையில் சைவசமய பொது அறிவுப் போட்டியினை ஏற்பாடு செய்துள்ளது.

☆ ☆ ☆

கோப்பாய் பிரதேச செயலகத்தில் நாளை புதன்கிழமை காலை 10மணிக்கு விசேட பொங்கல், சமயச் சொற்பொழிவு என்பன இடம் பெறும்.

☆ ☆ ☆

நல்லூர் ஸ்ரீபாலகதிர்காம தேவஸ்தானத்தில் நாளை புதன்கிழமை காலை 9மணி முதல் விசேட அபிஷேக ஆராதனைகள், பஜனை, சிறப்புச் சொற்பொழிவு என்பன இடம்பெறும்.

(எ-சி-73-49-14-135)

# யாழ்.பல்கலைக்கழகம்

## கேள்விப்பத்திர அறிவித்தல்

### மர/உருக்குத் தளபாடங்கள் வழங்கல்

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு கீழ்வரும் மர/உருக்குத் தளபாடங்கள் வழங்குவதற்குத் தகுதிவாய்ந்த விநியோகஸ்தரிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றது.

1. மரத்தினாலான கற்கை மேசை - 50
2. மரத்தினாலான நேர் சாய் கதிரை - 100
3. மரத்தினாலான விறாந்தைக் கதிரை - 75
4. மரத்தினாலான கற்கை போட் - 75
5. மரத்தினாலான உடுப்பு ராக்கை - 27
6. மரத்தினாலான அலுமாரி - 50
7. உருக்கு இரட்டைக் கட்டில்கள் - 56
8. உருக்கு இரட்டைக் கட்டில்களுக்கான "ஒக்கிட்" மெத்தை (72"x36"x4") (Ceyesta Product) - 162

கேள்விப்பத்திரதாரர் மீளளிக்கத்தகாத வைப்புப் பணமாக ரூபா 1000/= மும் மீளளிக்கும் வைப்புப் பணமாக ரூபா 5000/= மும் நிதிக்கிளையில் பணமாகச் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டுடன் நிதியாளரிடம் தொடர்பு கொண்டு கேள்விப்பத்திர ஆவணங்களை 08.05.2003 தொடக்கம் 13.05.2003 வரை பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் திருநெல்வேலி என முகவரியிட்டு 21.05.2003 பிற்பகல் 2.00 மணிக்கு முன்பதாக பதிவுத் தபால் மூலமாகவோ அன்றி நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் மர/உருக்குத் தளபாடங்கள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரம் எனக் குறிப்பிடல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக சபை அறையில் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பித்தவர்கள் சமுகம்தரலாம்.

*யாழ்.பல்கலைக்கழகம்.* (C/27730) பதிவாளர்.

# மரண அறிவித்தல்கள்

## மாணிக்கம் சுப்பிரமணியம்

*(வாஸ் அண்ணன்)*

நல்லூர், முத்திரைச் சந்தியைப் பிறப்பிடமாகவும் தற்போது இந்தியாவில் வசித்தவருமாகிய மாணிக்கம் சுப்பிரமணியம் (வாஸ் அண்ணன்) 03.05.2003 சனிக்கிழமை சென்னையில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.05.2003 ஞாயிற்றுக்கிழமை சென்னையில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*16,ராணி வீதி,* தகவல்:
*நல்லூர்.* (17585) சி.சத்தியபாலன் (மருமகன்)

## திருமதி மகேஸ்வரி இராஜநாயகம்

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, நந்தாவில அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி இராஜநாயகம் நேற்றுமுன்தினம் (04-05-2003) ஞாயிறு அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா செட்டியார் - வள்ளியம்மை ஆச்சியின் ஏக புதல்வியும் காலஞ்சென்றவர்களான இராசையா - சின்னம்மா ஆகியோரின் மருமகளும் காலஞ்சென்ற இராஜநாயகத்தின் அன்பு மனைவியும் ஆறுமுகம், கதிரவேல் (J.P.), பஞ்சாட்சரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் யோகராணி (லண்டன்), நிர்மலா (நியூஸிலாந்து), பத்மா (கனடா), சாமளா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் த.பத்மநாதன் (லண்டன்), சி.பத்மநாதன் (நியூஸிலாந்து), ந.சுந்தரலிங்கம் (கனடா), வி.சிவஞானலிங்கம (கனடா) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.05.2003) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*நந்தாவில் அம்மன் கோவிலடி,* க.பஞ்சாட்சரம் (சகோதரர்),
*கொக்குவில் கிழக்கு.* (17583) த.பத்மநாதன் (மருமகன்).

# வலிகாமம் வடக்கு பிரதேச சபை

## காங்கேசன்துறை, மல்லாகம்

## கேள்வி அறிவித்தல் - 2003

கீழ் குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் 'இக்ராட்' நிறுவனத்தில் தரம் 'எம் 9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்குப் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கப்படும் கடைசித் திகதி | : 19.05.2003 | பி.ப. | 03.00 மணி |
| கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி | : 20.05.2003 | பி.ப. | 02.00 மணி |
| கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி | : 21.05.2003 | மு.ப. | 10.30 மணி |

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை 'செயலாளர், வலிவடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை, மல்லாகம்' என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித் தெரு யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கும் எதிர்வரும் 20.05.2003ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடல் வேண்டும்.

| இல. | வேலையின் பெயர் | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர பணம் (VAT உட்பட) |
|---|---|---|---|
| 01. | கொட்டோலை வீதி | 1500.00 | 600.00 |
| 02. | குருக்கள் கிணற்றடி பிள்ளையார் கோயில் வீதி கட்டம் II | 500.00 | 300.00 |
| 03. | தொந்தனை வீதி, கட்டம் II | 1000.00 | 600.00 |

இது தொடர்பான மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம.

*வலிகாமம் வடக்கு பிரதேச சபை,*
*தலைமை அலுவலகம்,*
*காங்கேசன்துறை, மல்லாகம்.*
*05.05.2003* (C/27731)

பொ.வைரமுத்து
செயலாளர்,
தவிசாளருக்காக.

# அதிபோஷாக்கு மிக்க உன்னத பானம்

# PROVIN-X

புரோவின்எக்ஸ் இல் 16 வகையான
விற்றமின்களும் மேலதிக
கனியுப்புக்களும் அடங்கியது.

- இழந்த சக்தியை விரைவாக மீட்டெடுத்தல்
- நோய்வாய்ப்பட்டோர் உடன் புத்துணர்வு பெற
- கண்பார்வை சக்தியை அதிகரித்தல்

மேலும் விளையாட்டு வீரர்
கர்ப்பிணித்தாய்மார் வளரும் பிள்ளைகள்
வயோதிபர் உட்பட முழுக்குடும்பத்துக்கும்
ஏற்ற சிறந்த பானம்






*யாழ். முகவர்:*
**ஜெகன் பார்மசி,**
ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.
T.P: 222 3191

*வன்னி முகவர்:*
**அகிலன்ஸ் பார்மஸி**
(பிள்ளையார் மருந்தகம் கிளிநொச்சி)

*இலங்கையில் சந்தைப்படுத்துவோர்:*
**ARKEM COLOMBO**
T.P.: 470290, 075 344436
E-mail: arkem@sltnet.lk

(சி27733)

**PROVIN - X** தற்போது அனைத்து முன்னணி பார்மசிகளிலும் பிரதான கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.


## சிறீசபாரத்தினத்தின் நினைவு தினம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், மே6

தமிழீழ விடுதலை இயக்கத்தின் மறைந்த தலைவர் அமரர் சிறீசபாரத்தினத்தின் 17ஆவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் உள்ள வெலிக்கடைத் தியாகிகளின் நினைவுத் திறந்தவெளி அரங்கில் நடைபெற்றது.

அந்த இயக்கத்தின் பிரசார செயலாளர் என்.விந்தன் கனகரத்தினம், ரெலோ முதல்வர் சட்டத்தரணி என். சிறீகந்தா, ரெலோவின் தலைமைக் குழு உறுப்பினரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம். கே.சிவாஜிலிங்கம், இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்பி., ஈபி.ஆர்.எல்.எவ். (சுரேஷ்அணி) செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் நிகழ்வில் உரையாற்றினர்.

(ம-3)


### உடன் விற்பனைக்கு

☆Sony Audio, Vedio, 3CD Set
புத்தம் புதியது 3100W
☆ Wegapg 21" T.V.
☆ Dialog Sim, Card
என்பன உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
**கோ.கிருபாகரன்**
811, நாவலர் வீதி,
அரியாலை.
T.P. 0777 - 272636
077 - 6047020
(17588)



# 17 ஆவது ஆண்டு நினைவு அஞ்சலி....!

# அமரர்
# சிறீ சபாரெத்தினம்

(தலைவர், தமிழ் ஈழ விடுதலை இயக்கம் - ரெலோ)



**தமிழ் தேசிய இனத்தின் விடிவுக்காக
தமிழ் தேசிய சக்திகள் அனைத்தும்
ஒரே கொடியின் கீழ் அணி திரண்டு
நிற்கும் இக்கால கட்டத்தில், எம் இனத்தின்
ஒற்றுமைக்காக இறுதிவரை செயற்பட்ட
இலட்சிய இதயத்திற்கும் அதனுடன்
இணைந்து மரணத்தைத் தழுவிய ஏனைய
உடன் பிறப்புகளுக்கும் எம் கண்ணீர் அஞ்சலிகள்.**

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
TELO

தோற்றம்
28-08-1952

மறைவு
06-05- 1986

**தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ)**

(17590)

# கண்ணீர் அஞ்சலி



ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடமையாற்றும்

திருமதி

## திலகராஜா ஜெகத்ஜனனி

அவர்களின் திடீர் மறைவு எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கி பெருங்கவலையில் ஆழ்த்தியுள்ளது. அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மாசாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

- நலன்புரிச் சங்கம்.

பருத்தித்துறை
பிரதேச செயலகம்.

(சி-27728)

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு
24
~
03
~
1927



உதிர்வு
16
~
05
~
2002

## அமரர் சிவஞானம் சுப்பிரமணியம்

*(ஓய்வு பெற்ற ஜெயில் அதிகாரி)*

திதி: 06.05.2003

அன்பின் உருவாய் பாசத்தின் ஒளிவிளக்காய்
அனைவருக்கும் ஆதரவாய் ஒன்றிணைந்த மனதோடு
கடமைகள் புரிந்து என்றும் எவர்க்கும் நல்லன செய்து
என்றும் புன்னகை மாறா பொலிவுடன் திகழ்ந்து
இன்னும் பல்லாண்டு எங்களுடன் வாழாது
இறைவனுடன் இணைந்தீர்களே!
வருடமொன்று கடந்தாலும் நெஞ்சை
வருடிச்செல்லும் நினைவலைகள் தொடரும்
நாங்கள் வாழும்வரை
சுடரும் எங்கள் ஒளி விளக்கே!
என்றும் உங்கள் நினைவுடன்

வீரக்கொடியார் வீதி,
நுணாவில் சந்தி,
சாவகச்சேரி.

(17581)

-குடும்பத்தினர்.

## கட்டுடைப்பகுதியில் சணல்பயிர் திருட்டு

கட்டுடைப் பகுதியிலுள்ள வயற் காணிகளில் விவசாயிகளால் பயிரிடப்பட்ட சணல் பயிர்களை இரவு வேளையில் திருடர்கள்வெட்டிச் சென்று ஆடு, மாடுகளுக்கு உணவாகப் பயன் படுத்துவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு அடிக்கடி பயிர் திருடப்பட்டு வருவதை அடுத்து விவசாயிகள் இரவு வேளையில் தமது காணிகளில் திருடர்களை கையும் மெய்யுமாகப் பிடிப்பதற்காக காவல் காத்து வருகின்றனர்.

இதுபற்றி மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்திற்கும் கடித மூலம் அறிவித்துள்ளனர். (எ-135)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் முதலாவது பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் எதிர் வரும் 9ஆம் திகதி காலை 10மணிக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. அரச திணைக்களங்களின் தலைவர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர், பொதுமுகாமையாளர் மற்றும் அதிகாரிகள் இதில கலந்து கொள்வர். (ஐ-73)

## வீதியின் ஒருபகுதி புனரமைப்பு பொதுமக்கள் தரப்பில் விசனம்

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன வீதியின் ஒருபகுதி வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

வீதியின் ஏனைய பகுதி புனரமைப்புச் செய்யப்படாமையினால் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகப் பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது. (எ-31)

### கண்டெடுக்கப்பட்டது

மானிப்பாய் பிரதான வீதியில் 30-4-2003இல் தங்கச் சங்கிலியொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் திரு. செ.சற்குணராசா நிர்வாகி ஐடியல் கல்வி நிலையம், மானிப்பாய். என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளவும்.

(17576)

# விழிநீர் அஞ்சலி



*எமது அன்புக்குரியவரும் மதிப்புக்குரியவருமான தகவல் தொழில்நுட்பப்பூங்கா நூலகப் பொறுப்பாளருமான*

திருமதி

## திருஞானசோதி குணேந்திரன் (ஞானம்)

அவர்களின் திடீர் மறைவு எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது. அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

*177/4,கஸ்தூரியார் வீதி,*
*45, கஸ்தூரியார் வீதி,*
*96/1,கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(சி-27729)

சாரங்கா நகைமாடம்,
சாரங்கன் நகைமாடம் அன் சென்ரர்,
அருள்முருகன் நகைமாடம்,
உரிமையாளரும், ஊழியர்களும்.

### இந்து கலாசார அமைச்சு எழிலுற எடுக்கும் இரண்டாவது அனைத்துலக இந்து மாநாடு சிறப்புற

# வாழ்த்தி மகிழுகின்றோம்

உலகேத்தி உவந்திடவே
உயர்தமிழ்போல் வாழியவே!
*ஆதியொடு அந்தமிலா அருஞ்சைவ மணங்கமழ*
*அனைத்துலக மாநாடு அணிநகரில் பொலிந்திடுக!*
*நீதிநெறி தழைத்தோங்க நிலமெங்கும் அறம்பரவ*
*நித்தமும் உழைத்துவக்கும் நிறை மகேஸ்வரன் வாழி*
*மேதினியில் எங்கெங்கும் மேதக்க இந்துதர்மம்*
*மிக்கோங்கி மிளிர்ந்திடவே மேவுமருள் யாசிப்போம்*
*ஒகியுனர் தற்கரிய ஒப்பறு நற் சோதியனின்*
*உயரருளால் உலகெல்லாம் உயர்தமிழ்போல் வாழியவே!*

வாழ்த்துவோர்:
பரிபாலனசபை
கற்குளி கந்தசுவாமி ஆலயம்,
சாவகச்சேரி.

குறிப்பு:
மாநாடு தொடர்பான சிறப்பு நிகழ்ச்சி ஆலயத்தில் 09.05.2003 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும். அடியார்கள் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-27725)

# பணிநிலை வெற்றிடம்





சமையலாளர், சமையல் உதவியாளர் போன்ற பணி நிலைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் 2003.05.20 ஆம் நாளுக்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு நேரில் வருகை தரவும்.



**தகைமை :-** உணவு வகைகள் தயாரிப்பதில் அனுபவமுள்ள ஆண்கள் விண்ணப்பிக்கலாம்.

**குறிப்பு :-** திறமைக்கும் அனுபவத்திற்கும் ஏற்ற ஊதியம் வழங்கப்படும்.





## நடுவப்பணியகம்,
## ஆயப்பகுதி, கிளிநொச்சி.

(சி-27724)

## கோப்பாய் பிரதேச மீள்கொடுப்பனவு பட்டியலில் ஒப்பமிடாதோருக்கு!

கோப்பாய்.மே6

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த, கொடுப்பனவு பட்டியலில் கடந்த சனிக்கிழமை 03.05.2003 கையொப்பமிட முடியாது போன புதிய குடும்ப பதிவு அட்டையில் குறிப்பிட்ட பெயரை உடையவர்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமை (08.05.2003) பிற்பகல் 2.00 மணிக்கு குடும்பப் பதிவு அட்டை, தேசிய அடையாள அட்டை வங்கிக் கணக்குப் புத்தகம் ஆகியவற்றுடன் கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு சமுகம் தருமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

(ம-72)


**வாடகைக்கு தேவை**

சகல வசதிகளும் கொண்ட வீடு, யாழ்.மாநகர எல்லையினுள் உடன் வாடகைக்குத் தேவை.

தொடர்பு: **சிறிமுருகன்**

K.K.S. வீதி யாழ்ப்பாணம். 5392 (C/27736)


## துயர் பகிர்கின்றோம்

எமது வித்தியாலய அதிபர் திரு. செ.பேரின்பநாதனின் பாசமிகு தாயார்

### திருமதி சரஸ்வதி செல்லத்துரை

அவர்கள் 04.05.2003 அன்று காலமானதையிட்டு துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உப அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்,
யாழ். மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்.

(17591)

## துயர் பகிர்வு



02.05.2003 வெள்ளிக்கிழமையன்று அகால மரணம் அடைந்த எமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்

### திருமதி திலகராஜா ஜெகத்ஜனனி

அவர்களிற்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

பிரதேச செயலகம்,
வலி.தெற்கு உடுவில். (17596)

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

## 31ஆம் நாள் நினைவுதின அஞ்சலி அழைப்பு

பிறப்பு 10 - 01 - 1952



இறப்பு 07 - 04 - 2003

### அமரர் ச.பாலசுப்பிரமணியம்

(கனகசிங்கம் சோதிடர்)

கனடாவில் காலமான சங்கரப்பிள்ளை பாலசுப்பிரமணியம் (கனகசிங்கம்) அவர்களின் 31ஆம் நாள் நினைவுதின அஞ்சலி நிகழ்வு தொடர்பாக நாளை (07.05.2003) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் சந்நிதியான ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ள அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கெருடாவில், தொண்டமானாறு. (17587) -குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தவமணி செல்வதுரை *(பாப்பா)*

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி செல்வதுரை நேற்று (05.05.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சட்டத்தரணி வெற்றிவேல் ஜயக்கோன் செல்வதுரையின் (உடுவில்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திருமதி குலமணி அபிமன்னசிங்கம், கந்தையா மாணிக்கலிங்கம் (முன்னாள் இந்தோனேஷிய வெளிநாட்டு தூதுவர்) ஆகியோரின் சகோதரியும் செல்வதேவி, செல்வலக்சுமி, செல்வகுமார், காலஞ்சென்ற தவக்குமார் மற்றும் சந்திரகுமார், ஆனந்தகுமார், இரட்ணகுமார், வசந்தகுமார், விஜயகுமார், செல்வறஞ்சினி, செல்வராணி நந்தகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மநாதன், சண்முகாதேவி, கமலாதேவி, புஷ்பம், உமாவதி, தவயோதி, காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி மற்றும் குகதாஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜனகன், றோஷாந்தி, தவசுதன், ஜெயம், சிவம், அனுஷா, உமாகாந்தன், துளசிகா, ஜெயகாந்தன், சாந்தி, றோகான், லவண்யா, லவன், மீரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மதுரிகா, கௌதம், அக்ஷயன் ஆகியோரின் பூட்டியும் இராஜகுலதேவி, மாணிக்கசோதி, சந்தானலக்சுமி (சட்டத்தரணி), உதயகுமார் ஆகியோரின சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.05.2003) புதன்கிழமை அவரது இல்லத்தில் (உடுவில் அம்மன் கோவில் அருகில்) காலை 10.00 மணியளவில் பூதவுடல் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சித்தாவத்தை,
உடுவில். (17599)

தகவல்:
பிள்ளைகள்.

## சீருடைத்துணி விநியோகம் 15ஆம் திகதியுடன் நிறுத்தம்

இந்த வருடத்திற்கான பாடசாலைச் சீருடைத் துணிகளை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகம் செய்யும் பணி எதிர் வரும் 15ஆம் திகதியுடன் நிறுத்தப்பட வேண்டும் என கல்வி அமைச்சு அறி வித்துள்ளது. எனவே பெற்றோர்கள் தமது பகுதி கிராம அலுவலருடன் தொடர்புகொண்டு கூப்பன்களைப் பெற்று 15ஆம் திகதிக்குள் தமக்குரிய துணிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-6)

## தமிழ்த்தின போட்டி முடிவு திகதிகள் மாற்றப்பட்டுள்ளன

அகில இலங்கை தமிழ் மொழித் தினம் தொடர்பான பாடசாலை மட்ட, வலய மட்ட, மாகாண மட்ட போட்டிகளை நடத்தி முடிக்கப்படவேண்டிய திகதிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக மனிதவள அபிவிருத்தி, கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லை நடராஜா அறிவித்துள்ளார்.

இதன்படி பாடசாலை மட்டப் போட்டிகள் எதிர்வரும் ஜூன் மாதம் 27 ஆம் திகதிக்கு முன்னரும்,வலய மட்ட போட்டிகள் ஜூலை மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னரும் மாகாண மட்டப் போட்டிகள் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னரும் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நிலைப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதிக்கு முன்னா மனிதவள அபிவிருத்தி, கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சுக்கு கிடைகக்கூடியவாறு அனுப்ப வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)


**நாவலர்**
ஆனைப்பந்தி, யாழ்.
O/L DAY CLASS
பிரிவு - 2 ஆரம்பம்:
07.05.2003
புதன் காலை 8 மணி. (17593)

**பில் கிளாக் தேவை**
நியு சித்திரகலா ஸ்ருடியோவிற்கு பில் கிளாக் தேவை.
அத்துடன் படப்பிடிப்பு பயில விரும்புவர்களும் நேரடியாக சமுகம் தரவும்.
நியு சித்திரகலா ஸ்ருடியோ
கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம். (17594)

**லிபேட்டி**

விஜய், ஸ்நேகா நடித்த
வசீகரா...
காட்சி நேரம் :
11.00, 3.00, 7.00 (புதிய நேரம்)

**லஷ்சுமி**
ரஜனி, சௌந்தர்யா, ரம்பா, ரகுவரன நடித்த
அருணாச்சலம்
தினசரி: 11.00, 3.00, 7.00 (17549)

**ராஜா** யாழ்ப்பாணம்
6 முதல் 7 வரை
JURASSIC PARK 3
10.30, 6.30, 9.30
சரத்குமார், சிம்ரன்
அரசு
7ஆம் திகதி வரை
பிற்பகல் 2.30க்கு மட்டும்
அடுத்த வெளியீடு புதிய கீதை (C/27626)

**நிறைஞ்சனாஸ்**
இன்று முதல்
சிவாஜி, பத்மினி நடித்த
தில்லானா மோகனாம்பாள்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.00 (பு.நே.)
China Strike Force ஜக்சன்

**நாகம்ஸ்** சுன்னாகம்
மக்கள் திலகம் M.G.R, ஜெயலலிதா, நம்பியார் மற்றும் பலர் நடித்த
இரகசிய பொலிஸ் 115
தினசரி காட்சிகள் :
11.00, 3.00, 7.00 (பு.நேரம்)


# மரண அறிவித்தல்கள்

### "சிவத்தமிழ்மணி" (ஆறுமா)
### மாப்பாணர் துரைராசா

*(ஓய்வு பெற்ற லிகிதர், சாவகச்சேரி நகர சபை, முன்னாள் ஓய்வூதிய சங்க செயலாளர், தென்மராட்சி)*

பலாலி தெற்கு, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் மீசாலை மேற்கு, வித்தியாலய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மாப்பாணர் துரைராசா நேற்று (05.05.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாப்பாணர் வள்ளிப்பிள்ளையின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை உமையவளின் மருமகனும் காலஞ்சென்றவர்களான யோகராஜா, தவயோகராஜா மற்றும் செல்வநாயகியின் சகோதரனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் இளங்குமரன் (நூல் நிலையம், சாவகச்சேரி நகரசபை), கோணேஸ்வரன் (கோணேஸ் தொலைத் தொடர்பு நிலையம், மீசாலை), கௌரிபாலன், சிவபஞ்சதரன் ஆகியோரின் தகப்பனாரும் சௌந்தரரூபி, திருமதி ச.கோணேஸ்வரன் (ஆசிரியை, யா/திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், கொடிகாமம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கிரிசாந், கிரீசன், மதுரங்கா, மதுரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2003) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.*
*T.P. No: 070 212977*
*0777 754616* (17601)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

### கணபதிப்பிள்ளை கந்தையா

*(ஓய்வுபெற்ற சுகாதாரப் பரிசோதகர் - PHI)*

சுதுமலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கந்தையா அவர்கள் சனிக்கிழமை 03.05.2003 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற புஸ்பராணியின் அன்புக் கணவரும் கௌரி (கனடா), சாவித்திரி (ஆசிரியை, யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்), ராஜிற் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr.நாகராசா (கனடா); தங்கேஸ்வரானந்தம் (சிறாப்பர், லங்கா சீமெந்து லிமிட்டெட், இணுவில்), ஸ்ரீ நகுலேஸ்வரிதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுபாஸ், சங்கீதா, சுவர்ணா, மயூரப்பிரியன், துவாரகன், சர்மிலன், நிலானி, நனுஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.05.2003) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.* (C/27737)

தகவல்:
மா.தங்கேஸ்வரானந்தம்.
(மருமகன்)

### திருமதி இராமலிங்கம் (ஓச்சி) இராசம்மா

காஞ்சிபுரம்,மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராமலிங்கம் (ஓச்சி) இராசம்மா நேற்று (05.05.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி இராமலிங்கத்தின் (ஓச்சி) அன்பு மனைவியும் திருமதி சுப்பிரமணியம் தவமணி, திருமதி சுப்பிரமணியம் பரமேஸ்வரி, நடராசா, இராசரத்தினம், கனகலிங்கம், திருமதி இராமலிங்கம் அழகம்மா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2003) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரின் மாதகல் காஞ்சிபுரம் இல்லத்தில் நடைபெற்று, மாதகல் போதி மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காஞ்சிபுரம்,*
*மாதகல்.* (17584)

தகவல்:
இ.நடராசா (மகன்)

### திருமதி மேசி அஞ்சலா செல்வத்துரை

*(ஆயுர்வேத வைத்தியர்)*

பண்டத்தரிப்பு, கீரிமலை வீதியைச் சேர்ந்த திருமதி மேசி அஞ்சலா செல்வத்துரை நேற்றுமுன்தினம் (04.05.2003) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் சாள்ஸ் செல்வத்துரையின் அன்பு மனைவியும் ஜெ... மோகன், மனோகரன், அருட்சகோதரன் மகேசன் (அமதி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ராஜ்குமார், மஞ்சுளா, சிறோமினா ஆகியோரின் அன்பு மாமியாரும் எட்வின், அம்ரிதா ஆகியோரின் அருமைப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.05.2003) புதன்கிழமை மாலை 3.00 மணியளவில் ஜா-எலவில் உள்ள கொட்டுக்கொட புனித கையித்தார் ஆலயத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கீரிமலை வீதி,*
*பண்டத்தரிப்பு,*
*யாழ்ப்பாணம்.* (17592)

*இல.99, பத்தும் ...யச,*
*கொட்டுக்கொ...*
*ஜா-எல. T.P.: 01-...9094*

### திருமதி கணபதிப்பிள்ளை நேசம்மா

ஊரெழு மேற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் மலேஷியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை நேசம்மா நேற்று (05.05.2003) திங்கட்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - சின்னத்தங்கம் தம்பதியினரின் அருமை மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், நவரட்ணம் (நேசதுரை), செல்ல...ணம் (சீனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வபூமணி, கா...சென்ற அம்பிகாபதி மற்றும் கமலாதேவி (Australia) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கருணாகரன் மற்றும் மனோன்மணி, காலஞ்சென்ற சிவானந்தராஜசிங்கம் ஆகியோரின் மாமியாரும் கோணேஸ்வரன், நீதிபரன், ஆதிபரன், சாந்திபரன், அனுஷா, கனதீபன், தனுஷா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2003) காலை 10 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்...பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"பிரேமகம்"*
*சபாபதி வீதி,*
*தலையாழி, கொக்குவில்.* (17589)

தகவல்
கோ...ணேஸ்...
(ஈசன்)

# புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க தூதரகங்களுக்கு ஈ.பி.டி.பி. கடிதம்

விடுதலைப் புலிகளிடமிருந்து நான்கு விடயங்களைப் பெறுவதற்கு வெளிநாட்டுத் தூதரகங்கள் அவர்களுக்கு உரிய வழியில் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று ஈ.பி.டி.பி. வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

நோர்வே, இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஜேர்மனி, சுவீடன், நெதர்லாந்து, ஜப்பான், சீனா, ரஷ்யா, இத்தாலி, சுவிட்ஸர்லாந்து, ஐரோப்பிய யூனியன் தூதரகங்களுக்கு ஈ.பி.டி.பி. கடிதங்களை அனுப்பியிருக்கிறது.

அழுத்தம் கொடுக்கக் கேட்கப்பட்ட நான்கு விடயங்களும் வருமாறு:-

★ மாறுபட்ட அரசியல் கருத்துக்களுக்கும் வடக்கு - கிழக்கு மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கும் அங்கீகாரம் அளித்தல்

★ மாற்று அரசியல் கட்சினருக்கும், குடிமக்களுக்கும் எதிராக வன்செயல்களில் ஈடுபடுவதில்லை என்று உறுதி வழங்குதல்.

★ புலிகளின் மனித உரிமை மீறல்களைக் கண்காணிப்புகுழு கண்காணிப்பதற்கு ஒப்புதல் கொடுத்தல்

★ ஈ.பி.டி.பி.யினருக்கு எதிரான தாக்குதல்களுக்கு பொறுப்பாக இருந்தார்கள் என்று அடையாளம் காணப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அவர்களைப் பொலீஸாரிடம் ஒப்படைத்தல். (ம)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் இந்த யோசனைகளை நிராகரித்திருப்பதாகவும் விடுதலைப் புலிகள் இரு வாரங்களில் தமது திருத்தங்களைச் சமர்ப்பிக்க இருக்கின்றனர் எனவும் கூறியிருக்கும் கண்காணிப்புக்குழுத் தலைவர், இந்த நிலைமைகள் காரணமாக ஓமந்தையில் நாளை நடைபெறவிருந்த உப குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகவும் நோர்வே பிரதியமைச்சரிடம் தெரிவித்திருக்கின்றார்.


NEW SCIENCE CENTRE
JAFFNA
2004 A/L
(மின்புலம்)
WED.,FRI.,6.00-7.00 p.m.
ஆரம்பம் : 07.05.2003
PAPER CLASS
(அலகு ரீதியான மீட்டல்)
TUE.,THU., 6.15-7.15 a.m.
2005 A/L புதிய பிரிவு
(பொறியியல்)
TUE.,THU., 5.00-6.00 p.m.
ஆரம்பம் : 08.05.2003 (17595)
By.M.கருணாநிதி B.Sc. (spl.)


## கோட்டையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா, பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சொலமன் சூ.சிறில், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். பரணிதரன் மற்றும் கிராம சேவையாளர் சங்க முன்னாள் தலைவர் க.சிவராசா உட்பட பலரும் தமது கருத்துக்களை அங்கு தெரிவித்தனர்.

அடையாள எதிர்ப்பு நடவடிக்கையை அடுத்து முற்பகல் 11 மணியளவில் அனைவரும் கலைந்து சென்றனர்.

எதிர்ப்பு நடவடிக்கை இடம்பெற்ற இடத்தில் பெருமளவு கலகம் அடக்கும் பொலீஸாரும் மற்றும் படையினரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

(எ-9-17)


புதிய வீடியோ CD வெளியீடு
விக்ரம நடித்த
சாமி
இன்றுமுதல்
CD களும், பிரதிகளும் உடன் பெறலாம்.
(C/27741)
விஷ்ணு வீடியோ கோண்டாவில்



மக்கள் மனதை வென்று
முதலாம் ஆண்டு நிறைவில்
மிலேனியம் பெஷன்
அன்
பொம்பே பஷார்


உள்ளம் கவர் பலவகை தெரிவுகள்
சேட், T-சேட், கோட்சூட் வகைகள், டெனிம்,
சோக்கோ ரவுசர் வகைகள்,
ரவுசர் துணி வகைகள்,
ஜம்பர் வகைகள், பட்டுச்சாறி, கவுண் வகைகள்,
ஸ்கேட் அன்ட் பிளவுஸ் வகைகள்,
சல்வார் கமீஸ் வகைகள்,
பேபி கவுண் வகைகள், நவீன டிசைன்களில்
பல ரக சாறி வகைகள்
அனைத்தும் உங்களிற்காகவே
❋ இன்று மட்டும் ❋
எமது வாடிக்கையாளர்களிற்கு
எமது நிறுவனத்தின்
ஞாபகப் பரிசில்கள் வழங்கப்படும்.
மிலேனியம் பெஷன்
அன்
பொம்பே பஷார்
இல.10, 11, மின்சார நிலைய வீதி,
பெரிய கடை (மலாயன் கபே முன்பாக),
யாழ்ப்பாணம்.
(C/27734)


## சமாதான...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

பத்திரிகையாளர்களிடம் அவர் கருத்துத் தெரிவிக்கையில், சமாதானத்தின் பெறுபேறுகளைப் போர்நிறுத்த உடன்படிக்கையே பொது மக்களுக்குப் பெற்றுத்தருகிறது என்பதால் அந்த உடன்படிக்கையைப் பூரணமாக அமுல்படுத்துவது குறித்தே தங்களின் கவனம் கூடுதலாகச் செலுத்தப்படுகிறது எனக் கூறினார். ஜப்பானிய, நோர்வேப் பிரதிநிதிகளுடனான சந்திப்புக்களை அடுத்து பத்திரிகையாளர்களைச் சந்தித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பேச்சுக்கள் இதயபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் நடத்தப்பட்டன எனக் கூறினார்.

## இவ்வாரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள ஜெனரல் சதீஸ் நம்பியார் அரச பிரதிநிதிகளையும், புலிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து பேசுவார் என்று அரச தொலைக்காட்சி நேற்றுத் தெரிவித்தது.

## ஈ.பி.டி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தர்மராஜா ஜெயராஜா கொலை செய்யப்பட்டார்.

புலிகள் இந்த மாதிரியான செயற்பாடுகளில் ஈடுபடுவது இது முதல் தடவையல்ல. கடந்த ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி கூட ஆலையடி வேம்புப் பிரதேச சபைத் தலைவர் மாரிமுத்து ராமலிங்கம் புலிகளால் கொலை செய்யப்பட்டார். 16 நாள்களில் ஈ.பி.டி.பி. பிரதேச சபைத் தலைவர்கள் இருவர் புலிகளால் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளைப்போலன்றி ஈ.பி.டி.பி.யினர் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு அரசின் வேண்டுகோளின்படி ஜனநாயக அரசியலில இணைந்துகொண்ட ஒரு கட்சியாகும். அவர்களின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டிருந்த ஆயுதங்களும் அரசால் அகற்றப்பட்டுவிட்டன.

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஈ.பி.டி.பி.யினருக்கு உரிய பாதுகாப்பு வழங்குமாறு உத்தரவிட்டுள்ள ஜனாதிபதி இடம்பெற்றுள்ள கொலை சம்பவங்களின் சூத்திரதாரிகளைக் கைதுசெய்ய உடன் நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுள்ளார். - இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)


சேவை நலம் பாராட்டுவிழா

கௌரவ உயர் திரு.
க.சின்னத்தம்பி
ஆசிரியர் அவர்கள்
இடம் : பாரதி கல்வி நிறுவனம்,
சித்தன்கேணி
காலம் : நாளை (07.05.2003)
புதன்கிழமை
நேரம் : பிற்பகல் 2 மணி
தலைவர்:
திரு. என்.பாலா (ஆசிரியர்)
பிரதம விருந்தினர்:
திருமதி
அருள்நங்கை சண்முகநாதன்
(விரிவுரையாளர்)
சிறப்பு விருந்தினர்:
திரு. வரதராஜன் (விரிவுரையாளர்)
திரு. குமாரவேல் (விரிவுரையாளர்)
விழா நாயகரைக் கௌரவித்தல்
(அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்)
கலை நிகழ்ச்சிகள்
நடன நிகழ்ச்சி
பட்டி மண்டபம்
திருமணம் என்பது சொர்க்கமா? நரகமா?
நடுவர் : அ.குமாரவேல்
சொர்க்கம் நரகம்
ஆசிரியர்கள் ஆசிரியர்கள்
திரு.N.பாலா திரு.மகேந்திரன்
திரு.தமிழ்மாறன் திரு. குகபரன்
திரு.சுதன் திரு. தரன்
(C/27738)
இக்கௌரவ பாராட்டுவிழா நிகழ்வில ஆசிரியர்கள் மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புக்கரம் நீட்டி அழைக்கின்றோம்.
பாரதி கல்வி நிலைய
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.


# பாலா கிளிநொச்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன், கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை முதலானோர் அன்ரன் பாலசிங்கத்தைக் கைலாகு கொடுத்து வரவேற்றார்கள். புலிகளின் காவல் துறைப் பொறுப்பாளர் எஸ்.நடேசன், புலிகளின் தளபதிகளான பானு, தீபன், துர்க்கா, விதுஷா ஆகியோரும் அங்கு கூடி நின்று வரவேற்பளித்தனர்.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தைச்சுற்றி பொதுமக்கள் பெரும் எண்ணிக்கையில் கூடி நின்றனர். கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மத்திய கல்லூரி மைதானத்திலிருந்து நேராக விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திக்கவென புறப்பட்டுச் சென்றார்.

இதேவேளை - -

ஜப்பான் விசேட தூதுவர் யசூசி அகாஷி நாளை புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை கிளிநொச்சியில் சந்தித்து பேச்சு நடத்துவார் என வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன. யசூசி அகாஷி விடுதலைப் புலிகளை டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி வலியுறுத்துவாரென்று தெரிவிக்கப்படுகிறது.

(ம)

## ஜப்பான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தையும் சந்தித்துப் பேசினார்.

"இரு தரப்பினருடனும் நல்லபடியாகவே பேசியிருக்கிறோம். இந்த வாரம் மேலும் முயற்சிசெய்வோம்.

"அன்ரன் பாலசிங்கத்துடன் ஆக்கபூர்வமான பேச்சுக்களை நடத்தினோம். ஆனால், அவை முடிவானவை அல்ல. இன்னும் தொடர்ந்து பேசுவோம்.

"சமாதானப் பேச்சுக்களில் தடங்கல் ஏற்பட்டது உண்மையிலேயே பாரதூரமான ஒரு விடயம்" என்று ஹெல்கிஸன் கருத்துத் தெரிவித்தார்.

"முக்கிய பிரச்சினையான வடக்கு - கிழக்கு அபிவிருத்தியில் உதவுநர் மாநாட்டில் கவனம் செலுத்தவேண்டுமானால் மாநாட்டில் விடுதலைப் புலிகளும் கலந்துகொள்ள வேண்டியது அவசியம்.

"புலிகள் கலந்துகொள்ள வேண்டியது ஒரு முக்கிய விடயம். முன்நிபந்தனை என்றுகூடச் சொல்லலாம்." - என்றும் ஹெல்கிஸன் சொன்னார்.

"முன்னேற்றம் காணவேண்டுமானால் நாம் சொல்லக்கூடியது இதுதான் அதாவது இரு தரப்பாரும் தமது பங்கைச் செலுத்தவேண்டும்" என்றும் ஹெல்கிஸன் தெரிவித்தார்.

## சமாதானம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்குக் களத்தில் முன்னேற்றங்களைக் காணவேண்டியது ஒரு தேவையாகவுள்ளது. களத்திலும், பேச்சு மேசையிலும் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டுள்ளது என்ற உயர்வான நம்பிக்கையுடன் நாம் தற்போது இருக்கின்றோம்.

இங்கு இப்போது எழுந்துள்ள சந்தேகங்கள், களத்தில் நாம் பலவற்றை சாதிக்கவேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதையும் யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலாக்கலில் இன்னும் முன்னேற்றம் காணப்படவேண்டும் என்பதையும் எங்களுக்குக் கற்பித்துள்ளன - என்றார்.

(ம)


எமது புதிய வீடியோ
CD வெளியீடு
முன்னணி நட்சத்திரங்கள் நடித்த
இன்றுமுதல்
விக்ரம்- விவேக் நடித்த
சாமி
பிரதிகள் உடன் பெறலாம்.
(17597)
வீடியோ விமல் யாழ்ப்பாணம்


## 2ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

மண்ணில் 30 10 1945



விண்ணில் 06 05 2001

### அமரர் கனகையா நந்தகுமார்

(நிர்வாக முகாமையாளர், உதயன் பணிமனை)

விதி வரைந்த தேதியிலே
விடைபெற்றாய் எமை விட்டு
நாதியற்றுத் தவிக்கும் எமக்கு
இறைவன் - நீ வழி காட்டிடுவாய்...!

இல.37, முதலியார் வீதி,
நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.

அன்புடன் நினைவுகூரும்
- குடும்பத்தினர்.

(C/27723)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகேஸ்வரி இராஜநாயகம்

இன்றைய 10 ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ள திருமதி மகேஸ்வரி இராஜநாயகத்தின் மரண அறிவித்தலில் அறிவிக்கப்பட்டபடி அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை இடம்பெறமாட்டா. இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
க.பஞ்சாட்சரம். (சகோதரன்)
த.பத்மநாதன் (மருமகன்)

நந்தாவில் அம்மன் கோவிலடி,
கொக்குவில். (C-27742)

### கணபதிப்பிள்ளை கனகரத்தினம்

(இளைப்பாறிய உத்தியோகத்தர், காணி அபிவிருத்திச் சபை)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வீரபத்திரர் வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கனகரத்தினம் அவர்கள் நேற்று (05.05.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஞானபூங்கோதையின் அன்புக் கணவரும் திருமதி ந.லிங்கேஸ்வரி, திருமதி செ.இரத்தினலீலா, இரவீந்திரன், திருமதி ஜே.வசந்தமாலா ஆகியோரின் அன்புத் தந்தையும் த.நவரத்தினம் (இளைப்பாறிய உத்தியோகத்தர், பிரதம தபாலகம், யாழ்ப்பாணம்), செ.செல்வராஜா, திருமதி இ.பவீந்திரா, யோ.யோகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2003) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திரர் வீதி,
கல்வியங்காடு. (17604)

இ.ரவீந்திரன்
(மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.05.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.